# கவிதை பாடுவோம்

## "திமிலைத்துமிலன்"



மட். மாவட்ட கலாசாரப்பேரவை
1.3.98 முதல் 30.5.98 வரை
வாராந்தம் நடாத்திய கவிதைப் பயிற்சி வகுப்பு (14)
உரைகளின் தொகுப்பு - கல்லச்சுப்பிரதிகள்

மட்.மாவட்ட கலாசாரப் பேரவை
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு
1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை நடாத்தும்
மரபுக் கவிதைப் பயிற்சி
(கவிஞர் திமிலைத்துமிலன்)

## பயிற்சி -- 1 கவிதை ஓர் அறிமுகம்

கவிதை என்பது என்ன?

ஏதேனும் ஒரு பொருள் (அனுபவம், உணர்ச்சி, கருத்து, காட்சி) ஓசைக்கோப்போடும், படிமச்செறிவோடும், உருவாக்கப்படும் போது அது கவிதையாகிறது. அதாவது வெளிப்படுத்த வேண்டிய பொருளை எப்படிக் கவித்துவத்தோடும் கலையுணர்வோடும் வெளிப்படுத்த வேண்டுமோ, அப்படி வெளிப்படுத்தும் போது அது கவிதையாகிறது.

### மரபுக்கவிதை

ஒரு உருவத்தையும் உள்ளடக்கத்தையும் கொண்டதாக ஓசை ஒழுங்கமைப்பைக் கொண்டிருக்கும். அது பாவும் பாவினமும் என இருவகையாகும்.

யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பனவெல்லாம் கவிதையைக் குறிக்கும் சொற்களே; தொல்காப்பியர் ; செய்யப்பட்டனவெல்லாம் செய்யுள் என்கிறார். அப்படியானால், கவிதை நடையிலோ, உரைநடையிலோ செய்யப்பட்டனவெல்லாம் செய்யுள் எனப்படும். பண்டை நாட்களில் செய்யப்பட்டனவெல்லாம் உரைநடையிலன்றி , கவிதை நடையிலேயே செய்யப்பட்டன. ஆகவே செய்யுள் என்ற சொல் கவிதையைக் குறிப்பது மரபாயிற்று. யாக்கப் பட்டனவெல்லாம் யாப்பே. அன்று யாக்கப்பட்டன வெல்லாம் கவிவடிவானதாக அமைந்தன. அதனால் கவியிலக்கணம் யாப்பிலக்கணமாயிற்று.

ஓசை ஒழுங்கமைப்புள்ள ஒரு மொழியுருவமே செய்யுள் / கவிதை. அந்த ஓசை ஒழுங்கமைப்பினுள் அடங்கும் உறுப்புக்கள் , செய்யுள் உறுப்புக்கள் எனப்படும். அவை : எழுத்து , அசை , சீர் , தளை , அடி, தொடை என்பனவாகும்.

...2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கவிதை

புதுக்கவிதைக்கு உள்ளடக்கம் அல்லது உயிர் மட்டுமே முக்கியம். வேறெந்த இலக்கணமும் அதற்கில்லை. இருக்கும் ஒரேயொரு இலக்கணம்; "எதை எப்படி வெளிப்படுத்த வேண்டுமோ அதை அப்படி வெளிப்படுத்த வேண்டும்" என்பதே. ஆனால் படிமத்தையும் குறியீட்டையும் கையாளும் போது புதுக்கவிதையின் சிறப்பு உயரும். ஆகவே, புதுக்கவிதை படைக்கக் கற்க வேண்டியதில்லை. ஆற்றலுள்ள எவரும் எழுதலாம். அதனால் எல்லோரும் புதுக்கவிதை எழுதுகிறார்கள். எழுதப்படும் எல்லாம் புதுக்கவிதையா? என்பது தான் கேள்வி.

## செய்யுள்கள் எல்லாம் கவிதையா?

கவிதைகள் எல்லாம் செய்யுளாகலாம். ஆனால் செய்யுள்கள் எல்லாம் கவிதைகள் அல்ல. ஓசை ஒழுங்கமைப்பும் செய்யுள் உறுப்புக்களும் கொண்டமைவனவெல்லாம் யாக்களினுள்ளும் பாவினங்களினுள்ளும் அடங்கும் செய்யுள்களே. எப்படிச் சொல்லப்பட வேண்டுமோ அப்படிக் கவித்துவத் தோடும் கலையுணர்வோடும் உள்ளக்கிளர்ச்சியூட்டுமாறு சொல்லப்படும் போது தான் அது கவிதையாகிறது. இந்த இயல்புகளைக் கொண்ட செய்யுள்களே கவிதைகள். ஏனையவையெல்லாம் வெறும் செய்யுள்களே.

## மரபுக்கவிதை படைப்பது எப்படி?

சுவையான நல்ல கவிதைகளை நிறையப் படியுங்கள். வாய்விட்டுப் படியுங்கள். அவற்றின் சத்தங்கள் - ஓசை ஒழுங்கமைப்புக்கள் உங்கள் உள்ளங்களில் படிந்து ஒலித்துக் கொண்டேயிருக்கும். அதை வைத்துக் கொண்டு நீங்கள் விரும்பிய ஓசை ஒழுங்கமைப்பில், நீங்கள் விரும்பிய பொருளைக் கலைத் தன்மையோடு வெளிக்கொணர்ந்து விடுவீர்கள். அது தான் கவிதை.

## செயற்பாடு : 1

[illegible]வரும் செய்யுள்களைப் படியுங்கள். இசையோடு வாய் விட்டுப் பாடுங்கள்.

1. அவற்றின் சத்தம், ஓசை ஒழுங்கமைப்பு பிடிபடுகிறதா?
2. அவற்றின் சத்தம், ஓசை ஒழுங்கமைப்பு விகற்பங்களை இனங்காண முடிகிறதா?
3. இந்தச் செய்யுள்களுள் எவை கவிதைகள்? எவை செய்யுள்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் (அ) , மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி

---- வள்ளுவர்

(ஆ) சற்றே துவையலரை தம்பியொரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை - குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை கம்மென வேமிள
காயரைத்து வைப்பாய் கறி

---- சிவஞானமுனிவர்

(இ) மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னிறத்த
செய்யகால் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று

---- புகழேந்தி

(ஈ) சேலுண்ட ஒண்கணாரிற் றிரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளிக் கனைப்பச்சோர்ந்த
பாலுண்டு துயிலப்பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை

--- கம்பர்

செயற்பாடு : 2

கீழ்வரும் பாக்களின் ஈற்றடிகளை / ஈற்றுவரிகளை அதன் கீழ்த் தரப்படும் அமைப்புக்களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.

(அ) கானப் பறவைகளே
கத்தும் கருங்குயிலே
கூனப் பிறை நிலவை
. . . . . . . . . . . . . . . .
(கொண்டு வாருங்கள்
கூட்டி வாருங்கள்
கொண்டுவந்து தந்திருங்கள்)

(ஆ) வானம் கறுக்குதன்னே மழைஞா றப் போகுதன்னே
காளைப் பறவையெல்லாம் கதிகலங்கிக் கத்துதன்னே
ஆனந்த மாதுவந்து ஆடுதற்குக் காலெடுக்கும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(ஈனப் பறவையப்பார் என்ன வெறியாட்டம்
தீனப் புறாக்கள் நிலை திண்டாட்டம்
மானொத்த கண்மயிலாள் வடிவழைகைப் பாருமன்னே)

(இ) வானில் இருங்கழுகு வட்டமிட்டு முட்டையிடும்
ஊன்குடிக்கும் தீக்குஞ் சுடன்பொரிக்கும் – தேன்குடிப்ப(து)
ஒப்ப வடகிழக்கில் உயிர்குடிப்ப மென்றெழுந்து
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(செப்புவதும் குற்றம் தெரியாதோ?
எப்பொழுதும் சார்வான் எமன்
முப்பொழுதும் செல்லின் முழுக்க முண்டே)

(ஈ) வாரிதீ ரன்னி மழைபொழியும் என்பார்கள்
ஊரிலிரு போரே ஒரேதொழிலாய் விட்டதனால்
மாரி பொழியாத வகைதறியா வான்மேகம்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(சேரியெல்லாம் செந்நீர் தெளிக்கும்
சோரியதை அள்ளிச் சொரியத்தான் போகிறது
பேரிகை கொட்டும் பேரிடி விழும்)

செயற்பாடு : 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு :- 4

கீழ்வரும் பாக்களைப் பூரணப்படுத்துக.

(அ) அலைக்கைகட்டி ஆர்ப்பரித்து
ஆழிநங்கை மகிழ்கிறாள்
இலைக்குமேலே இவர்கள் வந்து
இன்பத்தென்றல் குழைகிறாள்
தொலைவிலங்கு நீலவானில்
தோன்றிநிலாப் பொழிகிறாள்
.....................
.....................

(ஆ) முத்துமுத்தாய் ஏன்சிரித்தாள்
முல்லைமொட்டை ஏன்விரித்தாள்
புத்தம் புதியவண்ணப்
பூவிழியால் ஏன்அழைத்தாள்
கத்தும் குயிலோசை
கலந்துவரும் தென்றலின்று
.....................
.....................

(இ) கான மயிலோ கவிதை கருங்குயிலோ
ஞானக் கடலின் நவநிதியோ—கனப்
.........................
.........................

(ஈ) "ஆடும் மாடும் கோழிகளும்
ஐயோ பாவம் அவைகொன்று
தேடும் "ஞுண்டுக்" கொழுப்புடலைத்
தெய்வம் கண்டு சிரிக்காதோ?"
ஓடும் காவி யுடையோடும்
...................... ..அவன் புத்தன்
.........................
.........................
.........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு : 3

கீழ்வரும் பாக்கள் குழம்பிக் கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி சரியான வடிவத்தை ஆக்குங்கள்.

(அ) கண்ணாரக் காணக் கதவு
இறந்துபடின் ஏதந்தான் என்னாம் – உறந்தையர்கோன்
தண்ணார மார்பன் தமிழர் பெருமானை
திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்

(ஆ) பொங்கியழுகும் பொதுருண்ட விழித்துளிகள்
பளபளத்துப் புதியவானத்
எங்குமொரே பேய்க்காடாய் இருண்டுவிட
உலகமெதும் எழிலிவிம்மிப்
திங்களினை அழைப்பனபோய் கண்சிமிட்டி
மையலினைத் தெளிக்கும் விண்மீன்
கங்குலென்ற பெரும்பூதம் ஒளியனைத்தும்
விழுங்கியதாற் தகனமெல்லாம்

(இ) பசுப்பாலின் நிறமந்தக் கடைவாயில் மின்ன
சிலையான வயல்மாதர் அதுகண்டு சாய
களைகட்டு மிளமாதர் சதுராடி வாட
சுவையான நறைகொஞ்சும் எழில்விஞ்சு நாடே
பனையேறி இளஞ்சாலி கதிர்மேவி யுன்ன
சிலையேறும் வரால்வந்து திடுமென்று, பாய
களையாத குருமேசி கடுமாறி யோட
சுனைமீனும் இதுகான இசைபாடி நாடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுக்கவிதை

செய்யுள் உறுப்புக்கள் — ஓர் அறிமுகம்

ஒரே பார்வையில் செய்யுள் உறுப்புக்களை இங்கே காண்கிறீர்கள்.

மன்/னர் விரி)த்/(தா மரை)/பூத்/(த மண்)/டபத்/தே

:............................:............................:..........

பொன்/(னின் மடப்)/பா/(வை போய்ப்)/புக்/காள் —மின்/னிறத்/த

செய்/(யகால் வெள்)(ளைச் சிறை)/யன்/(னம் செங்)/கம/லப்

பொய்/கை/(வாய்ப் போ/(வதே போன்/று

| | |
|---|---|
| * / | சரிவுக் கோட்டால் பிரிக்கப்பட்டவை அசைகள் |
| — | கீழ்க் கோடிட்டுக் காட்டப்பட்டவை சீர்கள் |
| ... | புள்ளிக்கோட்டால் காட்டப்பட்டவை அடிகள் |
| ( ) | அடைப்புக் குறியால் காட்டப்பட்டவை தளைகள் |
| = | இரட்டைக் கோட்டால் காட்டப்பட்டவை தொடைகள் |

செயற்பாடு : 5

கீழ்வரும் பாக்களை அநுபவியுங்கள். அநுபவிக்கும் போது உங்களுக்கு ஏற்பட்ட மனஎழுச்சிகளை ஒவ்வொன்றாக விபரியுங்கள்.

1. அக்கினிக் குஞ்சொன்று, கண்டேன் — அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு — தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.

....8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர்மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்கு
கேணி யருகினிலே - தென்னை மரம்
கீற்றும் இளநீரும்.....

3. பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்புவர வேணும் - அங்கு
கத்தும் குயிலோசை - சற்றேவந்து
காதிற்பட வேணும் - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல்வர வேணும்.

4. பாட்டுக் கலந்திடவே - அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டுதர வேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா, நின்றன்
நாவலுற வேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையகத்தைப்
பாலித்திட வேணும்

— மகாகவி பாரதி

5. நீலவான் ஆடைக்குள் முகம் மறைத்து
நிலவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலமுழு துங்காட்டி விட்டாற் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்தனிப் பூவோநீதான்
சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுதவூற்றோ"
காலைவந்த செம்பருதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ"

— பாரதிதாசன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பூவிரி மதுகரம் இருகரவும்
பொருகயல் இருகரை புரளவும்
காவிரி யெனவரு மடநலீர்
கனக நெடுங்கடை திறமினோ

— சயங்கொண்டார்

8. கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவழச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

— ஆண்டாள்

9.

தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் குழலின் ஏங்கக் குவளைகள் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினிகாட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ

— கம்பர்

10. அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையு மிலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு கலாசாரப் பேரவை
மரபுக்கவிதைப் பயிற்சிநெறி. - 28.2.78 - 31.5.78
(12 வகுப்புகள்)

பயிற்சி:- 2வது வகுப்பு-

2. செய்யுள் உறுப்புக்கள்.

இலக்கியந்தான் முதலில் தோன்றியது. அதன் பின்பே அந்த இலக்கியத்துக்கு இலக்கணம் வகுக்கப்பட்டது. தோன்றிய அந்த இலக்கியம் கவிதை/செய்யுளிலேயே அமைந்தது. ஆரம்பத்திலே அந்த இலக்கியம் கவிதை/செய்யுள் வடிவிலே அமைந்தபோது யாப்பிலக்கணம் இருக்கவில்லை. யாப்பிலக்கணத்தைத் தெரிந்து கொண்டாலேதான் செய்யுள் இயற்றலாம் என நம்புபவர்களுக்கு இது விந்தையாக இருக்கலாம். யாப்பிலக்கணத்தை அறியாமல் எப்படி கவிதை/செய்யுள் இயற்ற முடியும்?

நிச்சயமாக முடியும்.
எப்படி?

இப்போது நாம் யாப்பிலக்கணம் இல்லாமலேயே கவிதை/செய்யுள்/பாட்டு இயற்றப்போகிறோம். இதற்கு ஏதோ ஒரு அடிப்படை நமக்குத்தேவை. அந்த அந்த அடிப்படை அம்சம் எது?

மொழியின் தோற்றத்திற்கே எதுமூலப்பொருளாக அமைந்ததோ அந்த ஒலி/ஓசைதான் கவிதை/செய்யுள்/பாட்டுக்கும் மூலப்பொருளாகும். அதனை ஓசை ஒழுங்கமைப்பு/சந்தம் என நாம் கூறலாம். அந்த ஓசை ஒழுங்கமைப்பேதான் யாப்பில்க்கணத்துக்கும் அடிப்படை. யாப்பிலக்கணம் வகுக்கப்படாத ஆரம்ப காலத்திலும் அந்த ஓசை ஒழுங்கமைப்பே கவிதை/செய்யுள் பிறக்க அடிப்படையாயிற்று. அந்த ஓசை ஒழுங்கமைப்பின் விகற்பங்கள்தாம் பல்வேறு செய்யுள் வடிவங்கள்/உருவங்கள் பிறக்கவும் காரணமாயிற்று.

செயற்பாடு:-

இலகுவிலிருந்துதான் சிரமமானதற்குப் போதல், கற்றல் விதிகளில் ஒன்று. அதை இப்போது மேற்கொண்டு கவிதை இயற்றப்போகிறோம். பாரதியார் சொன்னதுபோல இலகுவான சந்தத்தில், எளிதான சொற்களில் குழந்தைக் கவிதை/பாடல் ஒன்றைப் படைக்கப்போகிறோம்.

இப்போது உங்களை நான் கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறேன். மாலை நேரம், இனிய இரம்மியமான சூழல். கடற்கரையின் இயற்கைச் சூழலை நீங்கள் அனுபவிக்கிறீர்கள். அந்த அனுபவ இலயிப்பின் பிரதிபலிப்பாக, நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறிய-எளிய வாக்கியம் கூறுகிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நீலவானம் தெரிகிறது
பெரிய கருங்கடல்
இனிய காற்று வீசுகிறது
அலைகள் அடிக்கின்றன
கடலைக்காரன் வருகிறான்
காகம் பறக்கிறது
வெள்ளை மணல் பரப்பு
தோணிகள் வருகின்றன
கரைவலை இழுக்கிறார்கள்
மீன்கள் துள்ளுகின்றன
நண்டுகள் ஓடி ஒளிக்கின்றன
அழகான சிப்பிகள்
பசுமையான அடம்பங்கொடிகள்
தாளை மரங்கள் அசைகின்றன
வெள்ளை நுரைக் குவியல்
இராவணன் மீசைகள். "

இந்த வாக்கியங்களை/சொற்றொடர்களை வைத்துக் கொண்டு, இரண்டு நான்குவரிப் பாடல்களை, இல்லை ஒரு நாலுவரிப் பாடலை இயற்ற முடியாதா?

முடியும்
நிச்சயமாக முடியும்

முதலில் ஒரு சிறிய-எளிய சந்தத்தை/ஓசை ஒழுங்கமைப்பை நிருணயித்துக் கொள்வோம்.

" தான தான தானன
தான தான தானன
தான தான தானன
தான தான தானன "

இந்தச் சந்த அமைதிக் கேற்ப மேலே சொன்ன வாக்கியம்/சொற்றொடர் களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து சிறு சிறு மாற்றங்களைச் செய்து, பொருள் பொதிந்த பாட்டைப் படைப்போம்.

" நீல வானம் தெரியுது
நீண்டு கிடக்கு கருங்கடல்
தாளை மரங்கள் அசையுது
தவழ்ந்து காற்றும் தழுவுது
காகம் அங்கு பறக்குது
கடலைக்காரன் வருகிறான்
வேகமாகத் தோணிகள்
விரைந்து வந்து சேருது. "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மீன்கள் துள்ளிப் பாயுது
வெள்ளை மணலும் விரியுது
நாங்கள் பார்க்க ஓடியே
. . . . . . . . . . . . . . . . . "

பார்த்தீர்களா, ஒருபாடலைப் பாட முயன்று மூன்று பாடலையே படைத்து முடித்துவிட்டோம். எஞ்சியுள்ள வாக்கியம்/சொற்றொடர்களைப் பயன்படுத்தி இன்னும் ஒரு இனிய பாடலைப் படைக்க முடியுமா? முயன்று பாருங்கள்.

செயற்பாடு :- 2

பனித்துளி நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அதைப்பற்றிச் சிந்தித்துண்டா? அந்தப் பனித்துளி கம்பரை ஒருநாள் திக்கு முக்காடச் செய்துவிட்டதாம்.

கம்பர் அதிகாலையிலே ஒரு கிராமத்தினூடாகப் போய்க் கொண்டிருந்தார். வழியிலே தோட்டக்காரர்கள் நீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள். நீர் இறைக்கும்போது வேலைப்பாரம் தெரியாமலிருக்க பாடுவது வழக்கம். துலாவில் நின்ற தோட்டக்காரன் பாடத்தொடங்கினான்.

" மூங்கிலிலை மேலே தூங்கு பனி நீரே . . . . " கீழே நின்று நீர்பாய்ச்சியவன் " போதும் " என்றான். இறைப்பும் நின்றது; பாட்டும் நின்றுவிட்டது. பாட்டின் அடுத்தவரியைக் கேட்க முடியவில்லையே என்று கம்பருக்கு ஏமாற்றம் அந்தப்பாடல். வரியைப் பாடிமுடிக்க முயன்று பார்த்தார். தோல்விதான் ஏமாற்றத்தோடு போய்விட்டார். ஆனால், அந்தப்பாடல் அடியைக்கேட்காமல் நிம்மதியாக மூச்சுவிட முடியவில்லை. அதனால் அடுத்தநாள் அதிகாலை ஓடோடி அங்கு போனார்.

" தூங்கு பனிநீரை வாங்கு கதிரோனே " இப்போதுதான் நிம்மதி பிறந்தது கம்பருக்கு.

எங்கே, பனித்துளிபற்றி ஒரு சிறிய இனிய பாடலை படைத்துக் காட்டுங்கள் பார்க்கலாம்.

முதலில் ஒரு சிறிய-எளிய, சந்தத்தைத் தேர்ந்தெடுங்கள்.

" தனத்தனா தனத்தனா
தனத்னான தனத்தனா
தனத்தனா தனத்தனா. "

எழுதி முடியுங்கள் . . . . . . . . . . அதன் ஆரம்பம் இப்படியும் இருக்கலாம். . .

" பனித்துளி பனித்துளி
பளபளக்கும் பனித்துளி. "
. . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . எழுதி முடித்துவிட்டீர்களா?

இசையோடு பாடுங்கள். வெற்றி உங்களுக்குத்தான். அந்த அநுபவத்தை வைத்துக்கொண்டு நீங்கள் விரும்பிய எந்தப் பொருள்பற்றியாயினும் சரி நாலு வரிப்பாடல்கள் படைத்து மகிழுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் உறுப்புக்கள் எவை?

01. எழுத்து
02. அசை
03. சீர்
04. தளை
05. அடி
06. தொடை

இவ் உறுப்புக்கள் பற்றி முழுமையான ஒரே பார்வையிலே ஏற்கனவே பார்த்தோம், செய்யுள் உறுப்புக்களில் முதலாவது உறுப்பு எழுத்தாகும். எழுத்து இல்லையென்றால் செய்யுளை மாத்திரமல்ல. உரைநடை இலக்கிய வடிவங்களையும் படைக்க முடியாது. ஆகவே, எழுத்துப்பற்றி அறிந்து கொள்வோம். மரபுக்கவிதை வடிப்பதானால் தமிழ் எழுத்துக்கள் பற்றிய பூரண அறிவு தேவை.

எழுத்து என்றால் என்ன?

" மொழி முதற் காரண மாமணுத் திரளொலி எழுத்தது முதல்சார்பெனவிரு வகைத்தே " என்கிறது நன்னூல்.

மொழிக்கு மூலகாரணமாக அமைவது அணுத்திரள் ஒலி. அந்த ஒலித்தனுக்கே வரிவடிவத்தில் எழுத்தாகிறது. கருத்துக்களையெல்லாம் நினைவில் வைத்திருந்த காலம் ஒன்று இருந்தது. அவற்றைப் பதிவுசெய்துவைக்க நம்முன்னோர் கண்டுபிடித்த வரிவடிவச் சாதனந்தான் எழுத்து. இந்த எழுத்துக்கள் பேச்சுறுப் புக்களால் எவ்வாறு பிறப்பிக்கப்படுகின்றன என்பதைக் கூறுவது ஒலிப்பிறப்பியல்.

தமிழ் எழுத்துக்கள் :-

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்து | - 12 | |
| ஆய்த எழுத்து | - 01 | |
| மெய்யெழுத்து | - 18 | |
| உயிர்மெய் எழுத்து | - 216 | என நால்வகை. |

உயிர் எழுத்து - அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ
இவை உயிர்போல தானே இயங்கவல்லன.

மெய்யெழுத்து - க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ற், ன்
உயிருடன் கூடியன்றி இயங்காத மெய்போல இவை உள்ளன.

உயிர்மெய்எழுத்து - க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ
முதலியன.

ஆய்த எழுத்து - இது நட்பமானது. உயிருமாகாது, மெய்யுமாகாது
தனிநிற்றலின் தனிநிலை எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துக்களின் மாத்திரைகள்.

எழுத்துக்களை ஒலிக்கும் நேரம் மாத்திரை எனப்படும். இயல்பாகக் கண் இமைக்கும் நேரமும், கைநொடிக்கும் நேரமும் மாத்திரை எனப்படும்.

உயிர் எழுத்துக்கள் நெடில், குறில் என இருவகை.

குறில் - அ, இ, உ, எ, ஒ
நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

குற்றெழுத்தை ஒலித்தல் அருமையானதால் அதை மொழியிலாளர் என்றும், நெட்டெழுத்தை ஒலித்தல் எளிமையானதால் . . . . என்றும் குறிப்பிடுவர்.

| | |
|---|---|
| குறில் | - 1 மாத்திரை |
| நெடில் | - 2 மாத்திரை |
| மெய் } ஆய்தம் } | தனித்தனி |
| குற்றியலுகரம் } குற்றியலிகரம் } | ½ மாத்திரை |

உயிரின் மாத்திரை அளவே உயிர் அறிய உயிர்மெய்க்கும் அளவாகும்.

மெய் எழுத்துக்கள் - வல்லினம் (க், ச், ட், த், ப், ற்)
மெல்லினம் (ங், ஞ், ண், ந், ம், ன்)
இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்) என மூவகையாகும்.

குற்றியலுகரம் :- தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளின் இறுதியில் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமாகும். அது ஈற்றெழுத்தாகிய தன்னைத் தொடக்கின்ற அயலெழுத்தின் வகையினாலே -

| | | |
|---|---|---|
| நெடிற்றொடர்க் | குற்றியலுகரம் | - (ஆடு, நாகு) |
| ஆய்தத்தொடர்க் | " | - (கஃசு, எஃகு) |
| உயிர்த்தொடர்க் | " | - (பலாசு, வரகு) |
| வன்றொடர்க் | " | - (கச்சு, கொக்கு) |
| மென்றொடர்க் | " | - (வண்டு, சங்கு) |
| இடைத்தொடர்க் | " | - (எய்து, அல்கு) |

என ஆறு வகைப்படும்.

குற்றியலிகரம் - "யகரம் வந்த புணர்மொழிக்கண் குற்றியல் உகரம் திரிந்த இகரமாகும். (நாகு யாது - நாகியாது)

"மியா" என்னும் அசைச் சொல்லிலே மகரத்தின் மேல் ஏறிநிற்கும் இகரமும் குற்றியலிகரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளபெடை :- பாட்டில் ஓசை குறையுமிடத்து எழுத்துக்கள்தம் மாத்திரையில் கூடியொலிப்பது. அது உயிரளபெடை, ஒற்றளபெடை என இருவகை.

உயிரளபெடை - மொழி முதலிலாயினும், மொழி இடையிலாயினும், மொழி இறுதியிலாயினும் வரும் (ஆஅடை, பலாஅசு, பலாஅ)

ஒற்றளபெடை - மொழி இடையிலாயினும் கடையிலாயினும் வரும் (சங்ங்கு, எஃஃகு)

முதனிலை எழுத்துக்கள் :- பன்னிரண்டு உயிரும், உயிரேறிய க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகிய ஒன்பது மெய்களும் மொழிக்கு முதலில்வரும் (அணி, ஆடை ...... கரி; சரி..)

க, ச, த, ந, ப, ம என்னும் ஆறும், பன்னிருஉயிரோடும் மொழி முதலாகும். (கலி, காலி ......)
வகரமெய் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ எனும் எட்டோடும் மொழி முதலாகும். (வலி, வாலி..)

யகரமெய், அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்னும் ஆறோடும் மொழி முதலாகும். (யவனர், யானை ......)

ஞகரமெய் - அ, ஆ, எ, ஒ எனும் நான்கோடு மொழி முதலாகும். (ஞமலி, ஞாலம்......)

இறுதிநிலை எழுத்துக்கள் :- எகரம் ஒழிந்த பதினொருயிரும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினொரு மெய்யும் (22) மொழி இறுதியாகும்.

எழுத்துக்களின் சாரியை :- காரச்சாரியை, கரச்சாரியை, கான்சாரியை, அ, சாரியை (அகரம், அககரம், அஃகான்)

எழுத்துப்போலி :- போல ஒலிப்பது
ஐயன் - அய்யன்
ஔவை - அவ்வை

திமிலைத்துமிலன்,

சிவ /

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/ கலாசாரப் பேரவை நடாத்தும்
மரபுப் கவிதைப் பயிற்சிநெறி.
(கவிஞர் திமிலைத்துமிலன்)

3. செய்யுள் உருட்டு – 'வடை'

மரபுக்கவிதை பற்றி புதுக்கவிதையாளர்கள் என்ன கருதுகிறார்கள்? அவர்களது கருத்தை புவியரசு என்பாரின் ஒரு புதுக்கவிதை வாயிலாகப் பார்ப்போம்.

அரைத்த மாவையே
குழைத்து உருட்டி
பழமைக் கல்லின்
நடுவில் நிறுத்தி
யாப்பு உருளையால்
எண்சீர் அளவுக்கு
இழுத்துத் தேய்த்து
உலர்ந்த உவமை
மாவைத் தூவி
எடுத்துச் சிலேடை
எண்ணெயில் போட
பஃப்' என
உப்பிச் சிரித்தது அது'

அதை ஆசையாய்
எடுத்து இலையில்
போடும் வேளையில்
ஒருபுறக் காற்று
'புப்'பென வீசிற்று ஓ'
குனிந்து பார்த்தேன்
உடைந்த அதற்குள்
ஒன்றுமே இல்லை.

இது வாசிப்பதற்குப் புதுமையாக- நகைச்சுவையோடு நளினமாக-த்தான் இருக்கிறது. ஆனால் இதிலே உண்மை இருக்கிறதா? எத்தனை சதவீதம்? உண்மைக்குமாறாக ஒன்றை உண்மை என்று பம்மாத்துக் காட்டும் ஒருவிசித்திர மனப்பான்மையில் இவர்கள் இருக்கிறார்களா?

இதை நாம் நம்பமுடியுமா? நம்பினால் மரபுக்கவிதை பற்றிச் சிந்திக்காமலே இருந்து விடலாம். "உடைந்த அதற்குள் ஒன்றுமேயில்லை" என்பது நாம் முன்னர் பார்த்த "சற்றே விலையலரை....." என்ற செய்யுளுக்குக் கூடப் பொருந்தாதே. அதிலேகூட ஏதோ ஒரு பொருள் இருக்கிறது. இதுவரை, பொய்யர்கள் கவிஞர்கள்தான் என்று கேள்விப்பட்டோம். அதைமிஞ்சிய பொய்யர்களாகவல்லவோ புதுக்கவிதையாளர்கள் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையில் ஒன்றுமே இல்லாததும், ஏதாவது இருப்பதும் அசைப்படைத்த கவிஞனின் திறமையைப்பொறுத்தது. அது இருவகைக் கவிதைக்கும் பொதுவானது. ஒரு குறிப்பிட்ட உருவமே இல்லாத புதுக்கவிதைக்கு உருவம் தேவையில்லை. ஆனால் மரபுக்கவிதைக்கு உருவமும் அவசியம் உள்ளடக்கமும் அவசியம், ஆகவே செய்யுள் உறுப்புக்களுக்கு வருவோம்.

## அசை.

அசையை ஆங்கிலத்தில் எனக்குறிப்பிடலாம். கீழ்வரும் குறள் வெண்பாவிலே அசைகளைக் காண்போம்.

எல்/லா விளக்/கும் விளக்/கல்/ல சான்/றோக்க்/குப்
பொய்/யா விளக்/கே விளக்/கு.

இந்தச் செய்யுளின் முதலாவது சீரிலே இரு அசைகள் உள்ளன. ஒன்று 'எல்' மற்றது 'லா'
இரண்டாவது சீரிலேயும் இரு அசைகள் உள்ளன. ஒன்று 'விளக்' மற்றது 'கும்'
மூன்றாவது சீரிலே மூன்று அசைகள் உள்ளன. ஒன்று 'விளக்', மற்றது 'கல்' அடுத்தது 'ல'
நான்காவது சீரிலேயும் மூன்று அசைகள் உள்ளன. ஒன்று 'சான்', மற்றது 'றோர்ச்' அடுத்தது 'குப்'

மரபுக்கவிதையைப் பொறுத்து, செய்யுளுக்கு எழுத்தெண்ணும் போது ஒற்றெழுத்து (மெய்யெழுத்து) க்களை கணக்கில் எடுப்பதில்லை என்ற எடுகோளை மனதில் வைத்திருப்போம். அந்த எடுகோளின் நினைவோடு குறள்வெண்பாவின் முதலாவது அடியை நோக்குவோம். அதிலேயுள்ளசீர்கள் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள அசைகளை அவதானிப்போமானால் அவை இரு திறத்தனவாகக் காணப்படுவதை அறியலாம். அதாவது(1) ஓரெழுத்தால்ஆன அசை, (2) இரண்டெழுத்தால் ஆன அசை ஓரெழுத்தால் ஆன அசை நேராக நிற்கிறதுஅதனால் அது நேரசை எனப்படுகிறது. இரண்டெழுத்தால் ஆன அசை நிரையாக நிற்கிறது அதனால் அது நிரையசை எனப்படுகிறது. தனித்து நிற்பது நேர். இரண்டெழுத்து வரிசையில் நிற்பது நிரை எனவே,

அசை
------------------------------
நேர்அசை நிரைஅசை என இருவகையாகிறது.

அசையாவது அசைந்து நிற்றல் என்ற பொருளுடையது. ஓரெழுத்தாதல், இரண்டெழுத்தாதல் அசைந்து நிற்பது அசையெனப்படும். ஒற்றெழுத்தை (மெய்யெழுத்தை) நாம் அசை பிரிக்கும்போது கணக்கில் எடுப்பதில்லை. ஆனால் ஒற்றெழுத்து அசையைப் பிரித்துக்காட்டுவது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும், எல்லா என்பதிலே 'எல்' என்பதை ஓர்அசையாகவும் 'லா' என்பதை மற்றோர் அசையாகவும் 'ல்' நின்று பிரிப்பதைக் காண்கிறோம்.

ஆய்த எழுத்தும் செய்யுளில் ஒற்றெழுத்தாகவே கருதப்படும்.

குறிலேனும் தனித்துவரினும் ஒற்றடுத்துவரினும் நேரசைகளாம். அவ்வாறாயின் நேரசை நான்கு வகையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 'குறில்' தனித்து வருவது — அ
2. 'குறில்' ஒற்றடுத்து வருவது — அல்
3. நெடில் தனித்து வருவது — மா
4. நெடில் ஒற்றடுத்து வருவது — மான்

( வா ழி நம் தாய் என்பதை நேரசைக்கு நினைவில் வைக்கலாம் ).

இதுபோல குறில் இணையேனும் குறில் நெடிலேனும் தனித்துவரினும் ஒற்றடுத்து, வரினும் நிரையசைகளாம். அவ்வாறாயின் நிரையசையும் நான்கு வகைப்படும்.

1. குறில் இணைந்து வருவது — பல
2. இணைக்குறில் ஒற்றடுத்து வருவது— பலம்
3. குறில் நெடில் வருவது — வரா
4. குறில் நெடில் ஒற்றடுத்து வருவது — வரால்

( அணி குழை அலங் கலாள்' என்பதை நிரையசைக்கு நினைவில் வைக்கலாம் ).

அசைபற்றி தொல்காப்பியம் இவ்வாறு கூறுகிறது.

"குறிலே நெடிலே குறில்இணை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசிற் பெயரே"

அசை பிரிக்கும் போது கவனிக்க வேண்டியவை.

1. அசைக்குப் பொருள் தேடல் ஆகாது—அசையில் பொருள் இராது.
2. ஒரு சீரில் உள்ள எழுத்துக்களையே அசையாகப் பிரித்தல் வேண்டும். மற்றச்சீரில் உள்ள எழுத்துக்களைச் சேர்த்துப் பிரித்தல் சரியல்ல.
3. புணர்ச்சி சேர்த்தே அசைபிரித்தல் வேண்டும் சந்தி பிரித்து அசை . பிரிக்கக் கூடாது.
4. இடையில் இருக்கும் மெய்யெழுத்து அசையைப் பிரித்துக் காட்டும்.
5. மெய்யெழுத்து கணக்கிடப்படுவதில்லை. ஆய்த எழுத்தும் மெய்யெழுத்துப் போலவே கருதப்படல் வேண்டும்.
6. இரண்டெழுத்துக்களுடன் மெய்யெழுத்துக்கள் சேர்ந்திருந்தாலும் அவை நிரையசைகளே.
7. ஐ. ஔ, என்னும் உயிரெழுத்துக்களும், இவ்வுயிர்கள் ஏறிய மெய்யெழுத்துக்களும் நெடியல்களே.
8. ரை என்ற எழுத்து சீருக்கு இடையில் வந்தால் ரகரம் போலக்கருதி அலகிடல் வேண்டும். ஐகாரம் சீரின் இடையிலும் கடையிலும் நிற்பின் குறிலின் பயனையுடையதாகும். உ-ம் காயரைத்து — கா/யரைத்/து (நேர் நிரை நேர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு:

பின்வரும் செய்யுள்களை அவதானித்து அசை பிரித்து அவை என்ன அசை என்பதையும் குறிப்பிடுக.

(அ)

முன்னம்நின் அன்னை முலையூட்டி
மையிட்டு மூக்குச்சிந்தி
கன்னமும் கிள்ளிய நாளல்ல
வே உன்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போலிரு
பொன்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னமும் சின்னவன் றானோசெந்
தூரில் இருப்பவனே.

(ஆ)

முந்நித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்

(இ)

ஆவீன மழைபொழிய இல்லம்/வீழ
அகத்தடியாள் மெய்ந்நோவ அடிமை/சாவ
மாவீரம் போகுமென்று விதைகொண்/டோட
வழிதனிலே கடன்காரன் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ள வொண்ணா விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தன் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களுமோ தட்சணையைக் கொடுவென்றாரே.

செயற்பாடு: 2

பூக்கள் என்ற தலைப்பில் ஒரு நான்கு வரிப் பாட்டு எழுதுங்கள். மிக இலகுவான ஒரு சந்தத்தில் அது அமையட்டும். எடுத்துக் காட்டாக -

பூவே புதுப் பூவே
புதிய மணம் தந்தாயே
மேவும் இள வெயிலில்
விரிந் தழகாய் நின்றாயே.

நீங்கள் எழுதிய பாடலில் எத்தனை சீர்கள் வந்துள்ளன. ஒவ்வொரு சீரிலும் வந்துள்ள அசைகளைப் பிரித்துக் காட்டுங்கள். அவை நேரசையா நிரையசையா என்பதையும் குறிப்பிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீர்கள்

அடுத்து நாம் சீர்கள் பற்றி அறியப் போகிறோம்.

அசை பற்றி அறிந்து கொண்டோம். அது நேர்அசை என்றும் நிரைஅசை என்றும் இரு வகைப்படும் எனக் கண்டோம்.

நேரசை நிரையசை என்ற இருவகை அசைகளும் தனித்தாவது இரண்டு முதலியன தொடர்ந்தாவது சந்தஅளபதியோடு முடிவது சீர் எனப்படும். அதாவது அசைகளால் அமைவது சீர்.

சீர் என்ற சொல் தாளம்/சந்தம் என்ற பொருளுடையது. இது சீராக அமைந்துள்ளது. என்று நாம் பேசுவது வழக்கம். அப்போது சீர் என்பது நல்லாக/அமைய வேண்டிய படி என்று கருதப்படும். எனவே சீர் என்பது நன்றாக அமைந்த தாளஅமைவு/நன்றாக அமைந்த சந்தம்/ஓசை ஒழுங்கு என்று பொருள் தரும்.

இந்த அடியைக் கவனியுங்கள்.

ஆவீன மழைபொழிய இல்லம் வீழ

இங்கே நான்கு சீர்கள் உள்ளன. முதலாவது சீரிலே மூன்று அசைகள். இரண்டாவது சீரிலே மூன்று அசைகள். மூன்றாவது சீரிலே இரண்டு அசைகள். நான்காவது சீரிலே இரண்டு அசைகள் வந்துள்ளன. இதிலிருந்து அசைகளால் அமைவது சீர் என்பதை அறியலாம். இதை வைத்துக் கொண்டு சீரை நாம் வகைப்படுத்தலாம்.

சீர் , தான் கொண்டு நிற்கும் அசையின் எண்ணிக்கையை ஒட்டி,

ஓரசைச்சீர்<br>
ஈரசைச்சீர்<br>
மூவசைச்சீர்<br>
நாலசைச்சீர். என நான்கு வகைப்படும்.

சிமிலைத்தமிழன்.<br>
20.03.98

இந்த/--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/கலாசாரப் பேரவை

## மரபுக்கவிதைப் பயிற்சி நெறி.

4வது வகுப்பு

### சீர் (Metrical feet)

28.3.98

நாம் அசைபற்றி அறிந்து கொண்டோம். அசை, நேரசை, நிரையசையென இரு வகை என்றும் அறிவோம்.

இந்த அசைகள் தனித்தாவது இரண்டு முதலியன தொடர்ந்தாவது தாள/சந்த அமைதியொடு ஒரு முடிவது சீர் எனப்படும் என்றும் நாம் அறிவோம். சீர்கள் நான்கு வகைப்படும். அவற்றைச் செய்யுள்களின் துணைகொண்டு இனிக் காண்போம்.

ஓரசைச்சீர்:

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளீர்
நிறைகாக்குங் காப்பே தலை"

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா"

"உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாட்
சிறுதேரை பற்றியும் தின்னும் - அறிவனாற்
காற்றொழில் என்று கருதற்க கையினால்
மேற்றொழிலும் ஆங்கே மிகும்."

இந்தச் செய்யுள்களில் ஓரசைச் சீர் உள்ளனவா? என்பதைக் கண்டறிய முடியுமா? இங்கே தரப்பட்டவை குறள்வெண்பாக்களும், வெண்பாக்களுமாகும். அவற்றின் இறுதி அடிகளில் உள்ள இறுதிச்சீர்களைக் கவனியுங்கள். அந்தச் சீர்களை எவ்வாறு அழைக்கலாம்.

அவை ஓரசைச் சீர்கள். ஓரசைச் சீரை அசைச்சீர் என்பர். அசை நேரசை, நிரையசை என இருவகைப்படுத்தலாம். ஓரசைச் சீரும் இரண்டு வகைப்படும்.

1. நேரசை - அசைச்சீர்
2. நிரையசை - அசைச்சீர்

ஓரசைச்சீர் பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றில் வரும்.

நேரசைக்கு வாய்பாடு - நாள்.
நிரையசைக்கு வாய்பாடு - மலர்.

...2/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான்', 'மலர்' என்ற ஓரசைச் சீருக்கான வாய்ப்பாட்டை, மேற்கூறிய செய்யுள்களின் இறுதிச் சீர்களோடு பொருத்திப்பாருங்கள், அப்போது அவை நேரசையாலான ஓரசைச்சீரா, நிரையசையாலான ஓரசைச்சீரா என்பது தெரியவரும்.

'பாலும் தெளிதேனும்'.....என்ற வெண்பாவின் ஈற்றுச்சீர் 'தா' என்பது. அது நேரசை ஓரசைச்சீர் நெடிலாலானது.

'ஈன்றபொழுதில்...' என்ற குறட்பாவின் ஈற்றில் உள்ள 'தாய்' என்பது நெடில் ஒற்றடுத்துவந்த நேரசை ஓரசைச்சீர்.

'சிறைகாக்கும்....' என்ற குறட்பாவின் ஈற்றுச் சீர் 'தலை' என்பது, அது நிரையசை ஓரசைச்சீர். இணைக்குறிலாலானது.

'உறுபுலி....' என்ற வெண்பாவின் ஈற்றுச்சீர் 'மிகும்' என்பது, அது இணைக்குறில் ஒற்றடுத்துவந்த நிரையசை ஓரசைச்சீர்.

வெண்பாவின் ஈற்றில் நேரசையோடும் நிரையசையோடும் உகரம் சேர்ந்து வருதலும் உண்டு. வெண்பாவின் இறுதி ஓசை இனிதாதல் கருதியே இந்த உகரம் சேர்க்கப்படுகிறது.

இதற்கான வாய்ப்பாடு:

நேர்+ உ = - காசு
நிரை+ உ = - பிறப்பு

பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றில் வரும் ஓரசைச் சீர்களுக்கான வாய்ப்பாட்டைத் தொகுத்துக் கூறினால் அது இவ்வாறு அமையும்.

நாள்
மலர்
காசு
பிறப்பு.

இதை நினைவில் வைத்திருத்தல் நல்லது.

## ஈரசைச்சீர்.

வேள் பாரியைக் கபிலர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் மூலமாக ஈரசைச் சீரைக் கவனிப்போம்.

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே

இந்தப் புறநானூற்றுச் செய்யுள் அகவற்பாவாகும். இதில் வரும் சீர்களை அசை பிரித்துப் பார்ப்போம். அகவற்பாவில் பெரும்பாலும் ஈரசைச்சீர்களைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்/தரு தா/னை மூ/விருங் கூ/டி

நிரை/நிரை நேர்/நேர் நேர்/நிரை நேர்/நேர் இவ் வடியிலே வந்துள்ள நான்கு சீர்களும் ஈரசைச்சீர்கள். இதுபோல ஏனைய அடிகளிலுள்ள சீர்களையும் அசைபிரித்துப் பாருங்கள். அவற்றுள் பெரும்பாலான ஈரசைச் சீர்களாக வரக்காணலாம். சிறுபான்மை மூவசைச் சீர்களும் வரலாம்.

இப்போது ஈரசைச்சீர்களை வகைப்படுத்துவோம்.

நேர் நேர்
நிரை நேர்
நிரை நிரை
நேர் நிரை

இந்த நான்கு நேரசைச்சீர்களுக்கும் பொருத்தமாகப் பெயர்வைத்திருக்கிறார்கள். இந்தப் பெயர்கள் அறிவியல் பூர்வமாக அற்புதமாக அமைந்துள்ளதை நாம் அறிந்து வியக்கலாம். இவற்றின் பெயர்களே இவற்றின் வாய்ப்பாடாகவும் அமைந்துள்ளன.

நேர் + நேர் = தேமா
நிரை + நேர் = புளிமா
நேர் + நிரை = கூவிளம்
நிரை + நிரை = கருவிளம்

இனிப்பானமா, புளிப்பானமா, வில்வம், விளா என்ற பயனும் சுவையுமுள்ள மரப் பெயர்கள் ஈரசைச்சீர்களுக்கு முறையே பெயர்களாக இடப்பட்டமை வியக்கத்தக்கது.

தேமா
புளிமா
கூவிளம்
கருவிளம், இவை நான்குவகையான ஈரசைச்சீர்கள் என்பதை நன்றாக நினைவில் வைத்திருத்தல் அவசியம்.

பின்வருவனவற்றை இந்த வாய்பாட்டுக்கேற்ப பிரித்துப் பார்ப்போம்.

| | |
|---|---|
| குன்/றக் | குற/வன் |
| நேர்/நேர் | நிரை/நேர் |
| (1) தே/மா | (2) புளி/மா |
| சா/யலள் | மட/மகள் |
| நேர்/நிரை | நிரை/நிரை |
| (3) கூ/விளம் | (4) கரு/விளம் |

இந்த ஈரசைச்சீர்களான தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் ஆகிய சீர்கள் அகவற்பாவிற்கேயுரியன. எனவே இந்த ஈரசைச்சீர்களை '<u>அகவற்சீர்</u>' என்பர். அகவற்பாவை ஆசிரியப்பாவென்றும் கூறுவர். எனவே இச்சீர்கள் <u>ஆசிரிய உரிச்சீர்</u> எனவும் பெயர் பெறும். இந்த ஈரசைச்சீர்களை <u>இயற்சீர்</u> என்றும் குறிப்பிடுவர்.

பொதுவாக மாவில் முடியும் சீர்களை <u>மாச்சீர்</u> என்றும், விளத்தில் முடியும் சீர்களை '<u>விளச்சீர்</u>' என்றும் கூறுவதும் உண்டு.

"ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய"

"தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் சீர் அகவற்காம்" என யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>செயற்பாடு - 1.</u>

(அ) பின்வரும் குறட்பாக்களில் வரும் ஓரசைச் சீர்களை எடுத்துக் காட்டுக, அவற்றின் அசைகளையும் குறிப்பிடுக.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு.

அனிச்சமு மன்னத்தின் தூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

(ஆ) பின்வரும் வெண்பாக்களில் வரும் ஓரசைச் சீர்களை எடுத்துக்காட்டி அவற்றை ஓரசைச்சீர் வாய்ப்பாடுகளோடு பொருத்திக் காட்டுக.

நாற்குலமும் நாற்படையா மைம்புலனும் நல்லமைச்சா
யார்க்கும் சிலம்பே யணிமுரசாய் - வேற்படையும்
வாளுமே கண்ணாய் வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாய்நெகிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇ - புள்ளினந்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கிள்ளி நாடு

(இ) கீழ்வரும் செய்யுளில் உள்ள ஈரசைச்சீர்களை எடுத்துக்காட்டி வகைப்படுத்துக.
வாய்ப்பாட்டிற்கு ஏற்ப.

மீனுண் கொக்கின் தூவி யன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்.
களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

<u>செயற்பாடு - 2.</u>

(அ) கீழ்வரும் 'கவி'யில் உள்ள சீர்களை எடுத்துக்காட்டி, ஈரசைச்சீர் வாய்ப்பாட்டுடன் பொருத்திக் காட்டுக.

(அ) பூவலைக் கிண்டி புதுக்குடத்தை மேலவச்சி
ஆரம் விழுந்தகிளி அள்ளுதுகா நல்லதண்ணி

(ஆ) 'மாமரத்துப் பூங்குயிலே .....' எனத் தொடங்கும் ஒரு 'கவி' இயற்றி, அதில் வரும் ஈரசைச்சீர்களை வாய்ப்பாடுகளுடன் பொருத்திக் காட்டுக.

-%-

- 'திமிலைத்துமிலன்' -

எஸ்எல்/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/கலாசாரப் பேரவை மரபுக்
கவிதைப் பயிற்சி நெறி

5. சீர்கள் (தொடர்)

111. மூவகைச்சீர்

பின்வரும் வெண்பாவிலே மூவகைச் சீர்களைக் காண்போம்.

கா/மர் கயல்/புர/ளக் கா/வி முகை/நெகி/ழத்
தா/மரை/யின் செந்/தேன் தளை/யவி/ழப் - பூ/மடந்/தை
தன்/னாட்/டம் போ/லும் தகை/மைத்/தே சா/கரத்/தூழ்
நன்/னாட்/டின் முன்/னாட்/டு நா/டு

கீழ்க் கோடிடப்பட்ட சீர்களெல்லாம் மூவகைச் சீர்கள். இந்த வெண்பாவிலே வந்துள்ள பெரும்பான்மையான சீர்கள் மூவகைச் சீர்களாகும்.

அச்சீர்களில் வந்துள்ள அசைகளை இனிக் கவனிப்போம்.

நிரை/நிரை/நேர்
கயல்/புர/ளக்

நிரை/நிரை/நேர்
முகை/நெகி/ழத்

நேர்/நிரை/நேர்
தா/மரை/யின்

நிரை/நிரை/நேர்
தளை/யவி/ழப்

நேர்/நிரை/நேர்
பூ/மடந்/தை

நேர்/நேர்/நேர்
தன்/னாட்/டம்

நிரை/நேர்/நேர்
தகை/மைத்/தே

நேர்/நிரை/நேர்
சா/கரத்/தூழ

நேர்/நேர்/நேர்
நன்/னாட்/டின்

நேர்/நேர்/நேர்
முன்/னாட்/டு

இச்சீர்களின் இறுதி அசைகளைக் கவனியுங்கள். எல்லா அசைகளும் நேரசைகளாகவே வந்துள்ளன. மேற்கண்ட வெண்பாவிலே வந்துள்ள மூவகைச் சீர்கள் எல்லாவற்றின் இறுதியிலும் வந்துள்ள சீர்நேரசைச் சீரேயாகும். இதிலிருந்து ஒரு பொது உண்மை நமக்குப் புலப்பட வேண்டும். அது என்ன?

"வெண்பாவில் இடம்பெறும் எல்லா மூவகைச் சீரிலும் இறுதி அசை நேரசையாகவே இருக்கும்" என்பதே அந்த உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி மூவகைச் சீர்களுக்கான வாய்ப்பாட்டை ஆக்குவோம். இதற்காக முன்னர் நாம்கற்ற ஈரசைச் சீர்களை நினைவுக்குக் கொணர்வோம்.

நேர் – நேர் — தேமா
நிரை – நேர் — புளிமா
நிரை – நிரை — கருவிளம்
நேர் – நிரை — கூவிளம்

இந்தச் சீர்களின் இறுதியிலே நேரசைகளைச் சேர்த்து விட்டால் அவை மூவகைச் சீர்களாக ஆகிவிடும்.

நேர் – நேர் – நேர்
நிரை – நேர் – நேர்
நிரை – நிரை – நேர்
நேர் – நிரை – நேர்

இறுதியிலே சேர்த்த நேர்களைக் "காய்" எனக் கொள்வோம். அப்போது வெண்பாவுக்கான மூவகைச் சீர்களுக்குரிய வாய்ப்பாடு வந்துவிடும்.

எப்படி?

நேர் – நேர் – நேர் — தேமாங்காய்
நிரை – நேர் – நேர் — புளிமாங்காய்
நிரை – நிரை – நேர் — கருவிளங்காய்
நேர் – நிரை – நேர் — கூவிளங்காய் வெண்பாவுக்குப் பயன்படும்

இந்த மூவகைச் சீர்களைக் காய்ச்சீர்கள் என்பர். இந்தக் காய்ச்சீர்கள் வெண்பாவுக்கே உரியன என்பதால் இச்சீர்களை வெண்சீர் எனவும் கூறுவர்.

"நடை காய் அடையின் வெண்பாவிற்காம்" — யா காரிகை

மூவகைச் சீர்கள் இந்த நான்கு மாத்திரமா? இல்லை. மூவகைச் சீர்கள் இன்னும் நான்கு உள்ளன. அவற்றைக் கீழ்வரும் செய்யுளில் காண்போம். இச்செய்யுள் வஞ்சிப்பா எனப்படும்

மன் / னீ / ரனல் வளி / வா / னொடு
வெண் / ணீர் / மதி வெங் / கதி / ருயிர்
என் / னீ / ருரு இயை / பசு / பதி
நாளும்

என்மன மிடங்கொள் குறைதலால்
வன்மனக் கொடியர்சொற் கலையங்குதலே

இச்செய்யுளின் முதல் மூன்றடிகளிலும் உள்ள சீர்களை அசைகளாகப் பிரிப்போம்.

நேர் / நேர் / நிரை
மன் / னீ / ரனல்

நிரை / நேர் / நிரை
வளி / வா / னொடு

நேர் / நேர் / நிரை
வெண் / ணீர் / மதி

நேர் / நிரை / நிரை
வெங் / கதி / ருயிர்

நேர் / நேர் / நிரை
என் / னீ / ருரு

நிரை / நிரை / நிரை
இயைய / பசு / பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூவகைச் சீர்கள் அனைத்திலும் இறுதி அசைகள் நிரையசைகளாக வந்துள்ளன. இறுதி நிரைகளைக் "கனி" எனக் கொள்வோம். அவ்வாறு கொள்ளும் போது வஞ்சிப்பாவுக்குரிய மூவகைச் சீர்களுக்கான வாய்ப்பாடு வந்துவிடும்.

நேர் - நேர் - நிரை — தேமாங்கனி
நிரை - நேர் - நிரை — புளிமாங்கனி
நிரை - நிரை - நிரை — கருவிளங்கனி
நேர் - நிரை - நிரை — கூவிளங்கனி

இந்த மூவகைச் சீர்கள் வஞ்சிப்பாவுக்கு மட்டுமே வரும் என்பதால் இவற்றை வஞ்சிச்சீர் வஞ்சியுரிச்சீர் என்பர்.
இச்சீர்கள் கனியில் முடிவதால் கனிச்சீர் என்றும் கூறுவர்.

"அந்தம் , கனியா வருக்க, வஞ்சிக்கு உரிச்சீர்"
— யாப்பருங்கலக் காரிகை

இக்கனிச் சீர்கள் இக்காலத்துக் கவிதைகளில் வருவதில்லை. ஆகவே கனிச்சீர்கள் பற்றி அதிககவனம் கொள்ளத் தேவையில்லை. ஆயினும் இவற்றை அறிந்திருத்தல் நல்லது.

நாலசைச்சீர்

நாலசைச்சீர்களைப் பின்வரும் வஞ்சிப்பா அடிகளில் காண்போம்.

"அள் / ளற் / பள் / ளத் தகன் / சோ / லைட் / டு
வேய் / கை / வா / யின வியன் / குன் / றா / நான்"

நேர் / நேர் / நேர் / நேர்
அள் / ளற் / பள் / ளத்

நிரை / நேர் / நேர் / நேர்
தகன் / சோ / லைட் / டு

நேர் / நேர் / நேர் / நேர்
வேய் / கை / வா / யின

நிரை / நேர் / நேர் / நேர்
வியன் / குன் / றா / நான்

முன்னர் நாம் கண்ட மூவகைச்சீர் எட்டின் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனி அடுத்து வருவன நாலசைச் சீர்களாகும். அவை பதினாறாகும்.

காய்ச்சீர் நான்கோடும் நேர் அமைவன. அவை பூ என்ற வாய்ப்பாட்டால் அமையும்.

நேர் - நேர் - நேர் - நேர் — தேமாந்தண்பூ
நிரை - நேர் - நேர் - நேர் — புளிமாந்தண்பூ
நிரை - நிரை - நேர் - நேர் — கருவிளந்தண்பூ
நேர் - நிரை - நேர் - நேர் — கூவிளந்தண்பூ

கனிச்சீர் நான்கோடும் நேர் அமைவன. அவை நறும்பூ என்ற வாய்ப்பாட்டால் அமையும்.

நேர் - நேர் - நிரை - நேர் — தேமாநறும்பூ
நிரை - நேர் - நிரை - நேர் — புளிமாநறும்பூ
நிரை - நிரை - நிரை - நேர் — கருவிளநறும்பூ
நேர் - நிரை - நிரை - நேர் — கூவிளநறும்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சீர் நான்கோடும் நிரை அமைவன. அவை தண்ணிழல் என்ற வாய்ப் பாட்டால் அமையும்.

நேர்—நேர்—நேர்—நிரை — தேமாந்தண்ணிழல்
நிரை—நேர்—நேர்—நிரை — புளிமாந்தண்ணிழல்
நிரை—நிரை—நேர்—நிரை — கருவிளந்தண்ணிழல்
நேர்—நிரை—நேர்—நிரை — கூவிளந்தண்ணிழல்

கனிச்சீர் நான்கோடும் நிரை அமைவன. அவை நறுநிழல் என்ற வாய்ப்பாட்டால் அமையும்.

நேர்—நேர்—நிரை—நிரை — தேமாநறுநிழல்
நிரை—நேர்—நிரை—நிரை — புளிமாநறுநிழல்
நிரை—நிரை—நிரை—நிரை — கருவிளநறுநிழல்
நேர்—நிரை—நிரை—நிரை — கூவிளநறுநிழல்

இவை கலிப்பாவுள்ளும் அகவற்பாவுள்ளும் பெரும்பாலும் குற்றியலுகரம் வந்தவிடத்து வரலாம். வஞ்சிப் பாவினுட் பெரும்பாலும் வரலாம்.

நாலசைச் சீர்கள் இக்காலத்துச் செய்யுள்களுள் வருவதில்லை. இவற்றை அறிந்து கொண்டால் போதும் இவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டியதில்லை.

செயற்பாடு—1

(அ) கீழ்வரும் வெண்பாக்களில் ஓர் அசைச்சீர்களை எடுத்துக் காட்டுக. அவற்றின் வாய்ப்பாடுகளையும் குறிப்பிடுக.

வாங்குவளைக் கையாள்வதன் மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளை
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூனாடிச் சோலை புக.

அஞ்சேல் மடவனமே உன்றன் அணிநடையும்
விஞ்சி யனையார் பணிநடையும் — விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மானைப் பிடித்ததார் மன்

(ஆ) பின்வரும் செய்யுள்களில் வரும் ஈரசைச்சீர்களை எடுத்துக் காட்டுக. அவற்றின் வாய்ப்பாடுகளையும் தருக.

வேரல் வேலி வேர்க்கட் பலவின்
சார னாட செவ்வியை யாமேகி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிய
ருயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

(இ) பின்வரும் வெண்பாக்களில் மூவசைச் சீர்களை எடுத்துக் காட்டுக. வாய்ப்பாடுகளையும் குறிப்பிடுக.

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள்—யாமவள்தன்
மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள்—காமன்
படைகற்பான் வந்தமைந்தான் பைந்தொடியார் பாத
நடைகற்பான் வந்தடைந்தோம் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்னைய முதலோடும் --பற்றி
அரவிந்தன் அரிந்திட்ட டவர்நிலையை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து

(ஈ) நல்லதோர் வீணைசெய்தே-- அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி -- எனைச்
சுடமிகும் அறிவுடன் --படைத்து விட்டால்
வல்லமை தாராயோ -- இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே
சொல்லடி சிவசக்தி-- நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ

இந்தப் பாடலின் சந்தத்தில் உமக்கு விரும்பிய பொருளில் ஒரு பாட்டெழுதுக.

(உ) "பாவப் பழமேஎன்ட
பகலெறிக்கும் சண்பகமே
நீலக் குயிலே, இப்ப
நிக்கட்டோ போய் வரட்டோ?"

இந்தக் கிராமியக் கவிக்கு பதில் உரைக்கும் வகையில் ஒரு கவி எழுதுக.

-- திமிலைத் துமிலன் --
01.04.98

இந்து/--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட். கலாசாரப் பேரவை மரபுக் கவிதைப் பயிற்சிநெறி

### 6. தளை

இதுவரை செய்யுள் உறுப்புக்களில் ஒன்றாக சீர்கள் பற்றி அறிந்து கொண்டோம். இனித் தளை பற்றிச் சிந்திப்போம்.

சீரோடு சீர் சேரும் வகையிலே சேர்க்க இயற்றும் செய்யுள் அடிகளிலே, சீர்களின் இடைநின்று இசைத்தொடர்ச்சி உண்டாகுமாறு அச்சீர்களைக் கட்டுவது அல்லது பிணிப்பது 'தளை' எனப்படும். அதை விரிவாகச் சொல்வதானால் நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீர்களின் முதல் அசையும் விதிப்படி ஒன்றியேனும் ஒன்றாதேனும் கூடி நிற்பதையே 'தளை' எனக்கிறோம். தளை என்பது தளைத்தல் — கட்டுதல் — பிணைத்தல் என்ற கருத்துடையது.

பாக்கள் நான்குவகை என்பதை அறிவோம். அவை ஆசிரியப்பா/அகவற்பா வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன. ஒவ்வொரு வகைப் பாவுக்குமுரிய இசை/சந்தம் உண்டாக வேண்டுமானால், அங்கே ஒருவகைக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடு அவசியமாகும். இந்தக் கட்டுப்பாடு அவசியமாகும். இந்தக் கட்டுப்பாடு இல்லையானால் பண் அமையாது. ஏழு இசையையும் ஒரு கட்டுப்பாட்டுக்குட்படுத்தி இசைக்கும் போது தான் இராகம் தோன்றும். இனிமை பிறக்கும். அதுப்போல அசைகளின் இணைப்பில் குறிப்பிட்ட கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது தளை எனப்படுகிறது. சீரையும் சீரையும் இணைக்கும் போதே அசைகளின் இணைப்பு ஏற்படுகிறது. இனிக்குறிப்பிட்ட வகைப் பாக்களில் இந்தத் தளைகளைக் காண்போம்.

1. நேரொன்றாசிரியத்தளை

ஈரசைச்சீர்களை அகவற்சீர் அல்லது ஆசிரியச்சீர் என முன்னர் அறிந்தோம். கீழ்வரும் ஆசிரிய/அகவற்பா அடிகளில் வரும் தளைகளைக் கவனிப்போம்.

போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானம் துன்று வாரே

இந்த அடிகளிலே முதல் அடியைக் கவனிப்போம். முதல் அடியின் முதற்சீர் "போது" என்பது. அது 'து' என்பது அசை. அது நின்ற சீர். அதன் இறுதி அசை 'து' என்பது. அது நேர் அசை வரும் சீர் "சாந்தம்" என்பது. அதன் முதல் அசை "சாந்" என்பது அதுவும் நேர் அசை. இந்த இரண்டு அசைகளும் இணையும் போது அது தளையாகிறது. அப்படியானால் அது என்ன தளை? (போது சாந்தம்) — நேர் ஒன்றாசிரியத்தளை நேரும். நேரும் ஒன்றிவருவது நேரொரொன்றா சிரியத்தளை. இந்த அகவற்பாவடிகள் ஒழுக்க நேரொன்றாசிரியத்தளையால் முடிந்தவை. அதைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

நேர்/நேர்/நேர் → நேர்/நேர்/நேர்
போ(து சாந்) (தம் பொற்)(ப ஏந்)தி

நேர்/நேர்/நேர்/நேர்
ஆதி நா(தற் (சேர்)(வோர்)

நேர் /நேர்/நேர்/நேர்/நேர்/நேர்
சோ(தி வா) (னம் துன்)(று வா)ரே

தேமாச் சீருக்கு முன்னாவது புளிமாச் சீருக்கு முன்னாவது நேரசை வருதலே நேரொன்றாசிரியத்தளை என்பதை நினைவிற் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நிரையொன்றாசிரியத்தளை

கீழ்வரும் அகவல்/ஆசிரியர் பாவை நோக்குவோம்.
அணிநிழல் அசோகமர்ந் தருள்நெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவம்நனி பரிசறுப் பவரே.

"அணிதிகழ்" என்ற நின்ற சீரின் இறுதி அசை "நிழல்" அது நிரையசை. "அசோகமாந் என்ற வருஞ்சீரின் முதல் அசை 'அசோ'. அதுவும் நிரையசை அந்த இரண்டு இசைகளும் இணையும் போது அது தளையாகிறது.

நிரை　　நிரை　　நிரையாக ஒன்றிவரும் அத்தளை
அணி(நிழல்　　அசோ)கமாற்　　நிரையொன்றாசிரியத்தளை.

இந்த அகவற்பாவடிகள் முழுக்க நிரையொன்றாசிரியத்தளையால் முடிந்தவை. இதையும் நீங்களே சரிபார்த்துக் கொள்ளலாம்.

நிரை　நிரை　நிரை　நிரை　நிரை　நிரை
அணி(நிழல்) அசோ)(கமாற் அருள்)(நெறி நடாத்)திய

நிரை நிரை நிரை நிரை நிரை
மணி(திகழ அவி)(ரொளி வர) தனைப்

நிரை　நிரை　நிரை நிரை நிரை நிரை
பணி(பவர் பவம்) (நனி பரி)( சறுப் பவ)ரே

கூவிளம் கருவிளம் சீர்களுக்கு முன்னே நிரையசை வருதலே நிரையொன்றாசிரியத்தளை என்பதை நினையிற் கொள்க.

நேரொன்றாசிரியத் தளையும் நிரையொன்றாசிரியத் தளையும் கலந்துவரும் அகவற்பாக்களும் உள. இதைக் கீழ்வரும் ஐங்குறுநூறு அகவற்பாவைக் கவனித்துக் கண்டு கொள்ளலாம்.

நேர் நேர்நேர் நேர் நேர் நேர்
அவ(ரோ வா)ராா.தான்)(வந் தன்)றே

நேர் நிரை நேர் நிரை
நறும்(பூங் குர) வம் பயந்)த

நேர் நேர் நேர் நேர் நேர்
செய்(யாப் பா) (வை கொய்)(யும் பொழு)தே

3. வெண்சீர் வெண்டளை

கீழ்வரும் குறள்வெண்பாவைக் கவனியுங்கள்.

நேர் நேர் நேர்நேர் நேர் நேர்
யாதா(னும் நா)டா(மல் ஊ)ரா(மால் என்)னொருவன்

நேர் நேர் நேர் நேர்
சாந்துணை(யும் கல்)லா( த வா)று

இங்கே இறுதிச் சீர்தவிர மற்றெல்லாச் சீர்களும் மூவகைச் சீர்களாய் வந்துள்ளன. மூவகைச் சீர்கள், இவை காய்ச்சீர்கள். காய்ச்சீர்முன் நேர் வருதலே வெண்சீர் வெண்டளையாகும்.

இக்குறள் வெண்பாவில் முழுவதும் வெண்சீர் வெண்டளை கொள்ளுமாறு சீர்கள் எல்லாம் வெண்சீர்களாய் ஒன்றி வந்துள்ளன. வெண்சீர் என்பது வெண்பாவுக்குரிய காய்ச்சீர் என்பதை முன்னர் அறிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இயற்சீர் வெண்டளை

கீழ்வரும் வெண்பாவைக் கவனியுங்கள்.

இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பலன்—எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடையாளன்
பொறுக்கும் பொறையே பொறை

இளையான் என்பது இயற்சீர் (ஈரசைச்சீர்) இறு நின்ற சீர். இதன் இறுதி அசை நேரசை. அடக்கம் என்று வரும் சீரின் முதலசை நிரையசை. இங்கே நேரின் முன் நிரைவந்துள்ளது. இவ்வெண்பாவின் பெரும் பாலான சீர்கள் இணையும் போது நேர்முன் நிரையே தளைகளாக வந்துள்ளன. இவ்வாறு வருவது தேமா, புளிமா இரண்டின் முன்னும் நிரை வருவதாகும். அடுத்து இவ்வெண்பாவின் மூன்றாம் அடியில் வரும் "உரனுடை" 'யாளன்' என்ற சீர்களை கவனிப்போம். 'உரனுடை' என்ற நின்ற சீரின் "உடை" என்பது நிரையசை. 'யாளன்' என்ற வருஞ்சீரின் முதலசை "யா" என்பது நேரசை. இவ்விரு சீர்களும் இணையும் போது நிரைமுன் நேரே தளையாக வருகிறது. இவ்வாறு தேமா, புளிமா என்னும் சீர்களுக்கு முன்னே நிரையும், கருவிளம் கூவிளம் என்னும் சீர்களுக்கு முன்பு நேரும் வருதல் இயற்சீர் வெண்டளையாகும். சுருக்கமாகக் கூறுவதாயின் மாமுன் நிரையும் " விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளையாகும். இவ்வெண்பாவில் முழுவதும் இயற்சீர் வெண்டளை வருமாறு சீர்கள் எல்லாம் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

5. ஒன்றிய வஞ்சித்தளை

கீழ்வரும் வஞ்சிப்பா அடிகளைக் கவனியுங்கள்.
"வினைத்திர்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளினை"

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

நிரை நேர் நிரை
வினைத் திர் பகை விழச் செற்றவன்
புளி மாங் கனி

இங்கு புளி மாங் கனி' க்கு முன் விழச் வந்திருக்கிறது. அதாவது கனிச்சீருக்கு முன் நிரைவந்திருக்கிறது. எனவே, கனிச்சீருக்கு முன் நிரை வருதலே ஒன்றிய வஞ்சித் தளையாகும்.

6. ஒன்றாத வஞ்சித்தளை

கீழ்வரும் அடிகளைக் கவனியுங்கள்
"வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள"

நேர் நேர் நிரை
வா னோர் தொழ வண்டா மரை
தே மாங் கனி

இங்கு தேமாங் கனிக்கு முன் 'வண்' வந்திருக்கிறது. அதாவது கனிச் சீருக்கு முன் நேர் வந்திருக்கிறது. எனவே கனிச்சீருக்கு முன் நேர் வந்து கனியோடு ஒன்றாமல் (நிரை நேர் என) நிற்கிறது. இவ்வாறு கனிச்சீருக்கு முன் நேர் வருதலே ஒன்றாத வஞ்சித்தளையாகும்.

கனிச்சீர் என்பது தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி, ஆகிய சீர்களைக் குறிக்கும் என்பதை அறிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கலித்தளை

கீழ்வரும் கலிப்பாவைக் கவனியுங்கள்.

அஞ்சம்போ னடையுடையா ளகங்களிப்பச் சுரர்பரவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவர் கரங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொதுவி னடமிடும்
கஞ்சந்தா ந் திருவடிகள் கருதிமட னொழிநெஞ்சே

நேர் நேர் நேர்
அஞ் சம போ னடை யுமையா
தே மாங் காய்

இங்கே "தேமாங்காய்" முன் 'னடை' வந்துள்ளது. 'னடை' என்பது நிரையாகும். எனவே காய்ச் சீருக்கு முன் நிரை வருவதே கலித்தளையாகும். என்பதை உணரலாம்.

இதைப் போல இக்கலிப்பாவின் ஏனைய சீர்கள் இணையும் போது அமையும் தளைகளையும் கண்டு தெளியலாம்.

இக்கலிப்பாவில் நான்கடிகளும் கலித்தளையே கொள்ளுமாறு சீர்கள் எல்லாம் வெண்சீர்களாய் வந்திருத்தலையும் கவனத்தில் கொள்ளலாம்.

இதுவரை நாம் கண்டறிந்த தளைகளை நிரற்படுத்துவோம்.

1. நேரொன்றாசிரியத்தளை )
2. நிரையொன்றாசிரியத்தளை ) ஆசிரியத்தளை

3. வெண்சீர் வெண்டளை )
4. இயற்சீர் வெண்டளை ) வெண்டளை

5. ஒன்றியவஞ்சித்தளை )
6. ஒன்றாவஞ்சித்தளை ) வஞ்சித்தளை

7. கலித்தளை ) வஞ்சித்தளை

ஏழாகும் என்பதை நினைவில் நிறுத்துவோம்.

செயற்பாடு :1

பின்வரும் செய்யுள்களை அவதானித்து அவற்றில் வந்துள்ள தளைகளைக் கண்டறிந்து அவை எவ்வகைப்பாவென மதிப்பிடுக.

"விலங்குலகின் மணிமுடியே வியன்படைப்பின் தனியரசே
நலமளிக்கும் புதுமைகளை நனிபடைத்த மனிதா நீ
பலவுலகும் அடிப்படுத்தும் பகரரிய திறனுடையாய்
பொலமிகுநின் சிறப்புகளைப் புகன்றிடுதல் இயலாதே"

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ – பார்பெற்று
மாதொடும் மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர்".

"பானர் தாமரை மலையவும் , புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்று இது விறல்மாண் குடுமி
இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி நெறி

## 7. அடி

சீர்களால் அமைந்தது செய்யுளுக்கு உறுப்பாகிய அடி. 'சீர்கள் என்ற சொல் ஒன்றுக்கு மேற்பட்ட சீர்களைக் குறிக்கும். அப்படியானால்

"அறஞ்செயயவிரும்பு" என்பது ஓர் அடியா? என்ற வினா எழும். ஆம், ஆனால் அது செய்யுள் அடியல்ல. செய்யுள் அடிகளையே நாம் இங்கே கவனிப்போம்.

செய்யுள் என்பது வேறு. சூத்திரம் என்பது வேறு. சூத்திரம் ஓர் அடியாலும் வரலாம். ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளாலும் வரலாம். ஆனால் செய்யுள் ஓர் அடியால் அமையாது.

'பாயிரம் பொது சிறப் பெனவிரு பாற்றே' என்பது. ஓர் அடியிலான சூத்திரம்.

"இலங்கை எழுத்திற் பல்வகைப் பொருளை
செல்வ னடியிற் செறிந்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்." இது

மூன்றடியால் ஆன சூத்திரம். சூத்திரம் என்பதை நூற்பா என்றும் கூறுவர். ஆயினும் சூத்திரம் செய்யுள் அல்ல. செய்யுளைப் போன்ற ஓர் அமைப்பே

ஆத்தி சூடி அமர்ந்த தேவன்
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே என்பன
ஆத்திசூடி அடிகள். அதுபோல

"கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" என்பன கொன்றை வேந்தன் அடிகள். ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்பன சூத்திரம் போன்ற சிறு சிறு சொற்றொடர்களாலும், பெரும்பெரும் சொற்றொடர்களாலும் அமைந்தவை. ஆயினும் அவற்றை ஈரடியால் அமைந்த செய்யுள் அல்லது பாட்டு என்பர். செய்யுள்/பாட்டு என்பது குறைந்தது இரண்டு அடிகளால் வரும். கூடியது ஆயிரம் அடிகளாலும் வரலாம். அதற்கு அளவில்லை. மதுரைக் காஞ்சி 782 அடிகளைக் கொண்ட பாட்டாகும்.

கீழ்வரும் செய்யுள்களைக் கவனியுங்கள்.

"உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார்
கடையாரே கல்லா தவர்" - இது இரு அடிகளால் ஆன குறள். வெண்பா. ஒவ்வொரு அடியிலும் எத்தனை சீர்கள் உள்ளன?

"கன்று குணிலாக கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமே தோழீ" இது

மூன்றடிகளால் ஆன ஆசிரியத் தாழிசை. அடிதோறும் எத்தனை சீர்கள் வந்துள்ளன.

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்பொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய் - போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. இது நான்கடிகளில் அமைந்த வெண்பா. அடிதோறும் எத்தனை சீர்கள் அமைந்துள்ளன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கரில் நுழைந்து வாவி புகுந்தரபங் கயந்த ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட்டுண்டு குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறவன்போல் இயங்கும் அன்றே"

இது நான்கடிகளால் அமைந்த அறுசீர் ஆசிரிய விருத்தம். ஒவ்வொரு அடியிலும் வந்துள்ள சீர்கள் எத்தனை?

"கோழியும் கூவின குக்கில் குரல்காட்டும்
தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவன் அடியேத்திக்
கூழை நனையக் குடைதும் குளிப்புனல்
ஊழியு மன்றுவோம் என்றேலோ ரெம்பாவாய்"

இது ஐந்தடியாலான தரவு கொச்சகக் கலிப்பா என்பர்.

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடையப் பற்நா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

இது எட்டடியாலான தரவு கொச்சகக் கலிப்பா. இவ்வாறு ஈரடி தொடங்கி, பல்வகை அடிகளையும் கொண்டமையும் செய்யுள்கள் தமிழ்க் கவிதையுலகில் காணப்படுகின்றன.

அவ்வாறான அடிகளின் வகைகளை இனிக் காண்போம்.

சீர்களால் அமைவது தான் அடி என அறிவோம். தமிழ் இலக்கிய உலகில் பல வகையான செய்யுள்கள் உள்ளன. அவற்றில் வரும் அடிகள் இரண்டு முதலான சீர்களாலும் அமையலாம். அதாவது ஓர் அடிக்கு 2 சீர்கள் முதல் 32 சீர்கள் வரைக்கும் அவை வருதலுண்டு. பெரும்பாலும் நான்கு சீர்களைக் கொண்ட அடிகளாலான செய்யுள்களையே சாம் பரவலாகக் காண்கிறோம். அவ்வாறு நான்கு சீர்களாலான அடிகளை அளவடி என்பர். 12 முதல் 16 சீர்கள் வரை கொண்ட அடிகளால் அமைந்த விருத்தப்பாக்கள் மிகுதியான கருத்துக்களைக் கூறுவதற்குப் பயன்படுவனவாகும்.

இவ்வாறான சீர்களின் எண்ணிக்கையை ஒட்டி அடிகளுக்குப் பெயர்கள் இடப்பட்டுள்ளன. அவற்றைக் கீழ்வரும் பாடல்களின் உதவியோடு இனிக் காண்போம்.

1. குறளடி

"மனைதீர்த்து நாயேன்
சினைதீர்த்தலானேன்
நனைதீர்க்க மாடே"
வினைதீர்த்த தேவே" இது இரு சீர் கொண்ட அடிகளால் அமைந்த பாடலாகும். இரு சீர் கொண்ட அடியே குறளடியாகும். இவ்வாறான குறளடிகளால் அமைந்த பாடல்களைச் சிறுவர்களுக்காக நாமும் பாடலாம்.

அடியோடு நீயும்
படியாத போது
விடியாது வாழ்வு
அடிகாழ் நேரும்.

கீழ்வரும் குறளடிப் பாடலைப் பூர்த்தி செய்ய முயலுவோம்.

ஒருகோடை நாளில்
கருநாக மொ[illegible]
அரிதாக வந்[illegible]
. . . . . . . . . . . . . . . . . . . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிந்தடி

நரக வாசையில் வன்பிறார்
தரணி மீதொரு கொன்பெறார்
சுரகு லோகமும் இன்புறார்
அருணை நாயகர் அன்பறார்.

இது மூன்று சீர்களாலான அடிகளைக் கொண்ட பாடல். மூன்று சீர்களைக் கொண்டு முடிவுபெறும் அடி சிந்தடி எனப்படும். சிந்து என்பது குறளடியிலும் சிறிது நீண்ட அடியாகும். பின்வரும் சிந்தடிப் பாடாலை பூர்த்தி செய்ய முடியுமா?

உரிமை யின்றியே வாழ்கிறோம்
நரக வேதனை யாழ்கிறோம்
பொருது சாதனை செய்கிறோம்
. . . . . . . . . . . . . . . . . . . .

3. அளவடி

மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்
கூற்றி லக்குயிர் கோடி கொடுத்துநின்
பேற்றினைப்பெறு வேமெனல் பேணினார்.

இது நான்கு சீர்களை அடிதொறும் கொண்டமைந்த பாடல். நான்கு சீர்களைக் கொண்ட அடி அளவடி எனப்படும். குறுகுதலும் நீருதலுமின்றி அளவுபட்டு நிற்றலாலும் அளவாய் இருப்பதாலும் அளவடி எனப்பட்டது. பல பாக்களிலும் இவ் அளவடியே தலைமை பெற்று நிற்பதால் இதனை நேரடி என்றும் கூறுவர்.

சேற்றி லேயும் இடர்குழி மீதிலும்
மாற்ற வேறுடை யின்றி வலம்வரும்
ஆற்ற லற்ற அடிமைத் தமிழினம்
. . . . . . . . . . . . . .
இந்த அளவடிப் பாடலைப் பூர்த்தியாக்குங்கள் பார்க்கலாம்.

4. நெடிலடி

முன்னம்நின் அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்தி
கன்னமும் கிள்ளிய நாளல்ல வேயுனைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளை நீ
இன்னும் சின்னவன் றானோசெந் தூரில் இருப்பவனே.

இது ஐந்து சீர்கள் கொண்ட அடிகள் நான்கால் அமைந்த பாடல். ஐஞ்சீர் அடியே நெடிலடி யாகும்.

5. கழிநெடிலடி

ஐந்து சீர்களுக்கு மேலும் சீர்கள் மிகுந்து நிற்கும் அடிகள் எல்லாம் கழிநெடில் அடிகள் எனப்படும். அறுசீரடி, எழுசீரடி, எண்சீரடி, பதின்சீரடி, பன்னிருசீரடி, பதினான்குசீரடி, பதினாறுசீரடி, முப்பத்திரெண்டு சீரடி, கொண்டனவாகி வருகின்ற எல்லா அடிகளும் கழிநெடில் அடி எனப்படும். இங்கு அறுசீர்க் கழிநெடிலடிச் செய்யுளுக்கு எடுத்துக் காட்டுத் தரப்படுகிறது.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்டுபோய்
இந்திர லோகம ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வரும் செய்யுள்களைக் கவனியுங்கள்.

அவை ஒவ்வொன்றும் எத்தனை சீர்க் கழிநெடில் செய்யுள்கள் என்பதைக் கண்டறிந்து வகைப்படுத்துங்கள்.

அ. நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்திநொந் துளம்நடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வமெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்

ஆ. ஒருரும் ஒரு குலமும் இல்லா என்னை
உங்கள் குலத் துள்ளோருள் ஒருவ னாக்கித்
தேருரு மவர் மனைக்கே வளர்ந்த என்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி அம்பு ராசி
நீருரும் புவிபாலா பலரும் போற்ற
நின்னிறு சீர் பெறவைத்தாய் நினைக்கேயன்றி
ஏருரும் கதிர்முடியாய் உற்ற போரில்
யார்க்கினியென் னுயிரளிப்ப தியம்புவாயே.

இ. கொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயம் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

ஈ. பேச வந்த தூத செல்ல ரிக்க ஓலை செல்லுமோ
பெருவ ரங்கள் அருள ரங்கர் பிள்ளை கேள்வர் நாளிலே
பாசம் வைத்த மறவா பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள் பதிவு குந்து பாரடா
வாச லுக்கி டும்ப டல்க வித்து வந்த கவிகமா
மருட கோடி தினைய ளக்க வைத்த காலும் நாழியும்
வீசு சாம ரங்கு டிற்றொ டுத்த கற்றை சுற்றிலும்
வேலி யிட்ட தவர்க ளிட்ட வில்லும் வாளும் வேலுமே.

— திமிலைத்துமிலன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. தொடை

தொடுக்கப்படும் தொடை, பூக்களைக் கொண்டு மாலை தொடுக்கிறோம். அந்த மாலை தொடையல் எனப்படுகிறது. அதுபோல எழுத்துக்களைக் கொண்டு சீர்களைத் தொடுக்கிறோம். அந்தச் சீர்களைத் தளைக்கும் போது செய்யுள் அடி உண்டாகிறது.

கீழ்வரும் செய்யுள் அடிகளைக் கவனியுங்கள்.

"கோல மிட்டு விளக்கினை யேற்றி
கூடி நின்று பராசக்தி முன்னே
ஓலமிட்டு புகழ்ச்சிகள் சொல்வார்
உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்
ஞாலமுற்றும் பராசக்தி தோற்றம்
ஞானமென்ற விளக்கினை யேற்றிக்
காலமுற்றும் தொழுதிடல் வேண்டும்
காத லென்பதோர் கோயிலின் கண்ணே

இப்பாடல் நாலடி கொண்டது. இது எட்டு வரிகளில் எழுதப்பட்டுள்ளது. இக்கவிதை அடிகளிலே இரண்டு வகையான தொடைகளும் காணப்படுகின்றன. அவற்றை உங்களால் இனம் காண முடிகிறதா.

### 1. மோனைத் தொடை

முதற்சீரின் முதல் எழுத்தோடு பின்வரும் சீர்களில் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனைத்தொடை யாகும். அதாவது சீர்கள் முதல் எழுத்தால் ஒத்துவருவது மோனைத்தொடை. மேலே கண்ட செய்யுளில் முதல் எழுத்துக்கள் ஒவ்வொரு வரியினதும் முதற் சீர்களில் ஒன்றி வருகின்றன. முதலடியின் முதற்சீரின் முதலெழுத்து "கோ" இரண்டாம் வரியின் முதற்சீரின் முதலெழுத்து "க" இவ்விரண்டும் எழுத்தால் ஒத்தவை. இனத்தால் ஒத்தவை. இதை ஒவ்வொரு அடி/வரியின் முதற்சரின் முதல் எழுத்தைக் கவனித்து அறிந்து கொள்ளலாம்.

"மாமன் அடித்தானோ மல்லிகைப்பூச் செண்டாலே
அத்தை அடித்தாலோ அல்லிமலர்ச் செண்டாலே

என்று படிப்பறிவேயில்லாத கிராமத்துப் பெண்கள் தாலாட்டுப் பாடும் போது இந்த மோனை இயல்பாகவே வந்து விடுவதைக் காண்கிறோம்.

"ஆரும் அடிக்கவில்லை ஐவிரலும் தீண்டவில்லை
தானே அழுகின்றான் தம்பிதுணை வேணுமென்று
அவனே அழுகின்றான் ஆத்தாள் மடி தேடி

என்று பாடிக் கிராமியப் பெண்கள் குழந்தைகளைத் தூங்க வைக்கிறார்கள். பாமரப் பெண்கள் தமது கணவரை இழந்து அழும் போது

"மலையாள வைத்தியனை மடிவசமாய்க் கூட்டிவந்தோம்
மலையாள வைத்தியனும் மருந்தறிய மாட்டிலையே"

என்று ஒப்பாரி வைக்கின்றனர்.

"சில்லென்று பூத்த சிறுநெருஞ்சி க காட்டுடே
நில்லென்று சொல்லி நிறுத்திவழிப் போனீரே"

என்று பாடிக் கண்ணீர் வடிக்கின்றனர். இங்கேயெல்லாம் அந்தப் பெண்களின் பாடலிலே இயல்பாகவே மோனைகள் வந்து விடுகின்றன.

வியர்பாரிகள்தமது பொருட்களை விற்பதற்காகக் கூறிச் செல்லும் போதும் இந்த மோனை களைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மீன்மீன் கொய்மீன் வெள்ளை நிறக் கொய்மீன்"
"கீரோய் கீரோய் கேட்டுவாங்கிக் கொள்ளுங்கோ
"போனால் கிடையாது பொழுபட்டால் விடியாது"

இது மாத்திரமல்ல, நாட்டில் வழங்கும் பழமொழிகளிற் கூட மோனைகளைக் காணலாம்.

"மாதா ஊட்டாத சோறு மாங்காய் ஊட்டும்"
"முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே"
"முதற் கோணல் முற்றும் கோணல்" இவ்வாறு பல இடங்களிலும்

மோனைகள் வருவதற்குக் காரணம் என்ன? அது தான் ஓசை இன்பம் அல்லது ஓசை நயமாகும். இந்த ஓசை நயம் கருதியே செய்யுள்களிலும் மோனைகளை அமைத்துள்ளனர் எனலாம். இவ்வாறான மோனைகள் பலவகை

(அ) சீர்மோனை

மோனை என்னும் சொல்லின் பொருள் 'முதல்' என்பதாகும். முதற் சீரின் முதலெழுத்தோடு பின்வரும் சீர்களில் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் முத லெழுத்து ஒன்றி வருவது-ஒரே எழுத்தால் ஒத்து வருவது 'சீர்மோனை' எனப்படும்.

"காதலுக்குக் கண்ணில்லை கண்ணிருந்தால் காதலர்கள்
சாதலிலும் தம்முள் சரிநிகராய்ச் சார்வாரா?"

இந்த அடிகளில் சீர்மோனைகள் வந்திருப்பதை நோக்குங்கள்.

"கண்டார் கவனித்தார் கருத்தொன்றிக் கண்புசித்தார்"
என்பது போல பேசுவதிற் கூட மோனைகளை நம்மவர் கையாள்வதைக் காண்கிறோம்.

(ஆ) அடிமோனை

"மாவும் புள்ளும் வழிவயின் படர
மாநீர் விரிந்த பூவும் கூம்ப
மாலை தொடுத்த கோதையும் கமழ
மாலை வந்த வாடை
மாயோன் இன்னுயிர் புறத்திறுத் தற்றே"

இப்பாட்டில் அடிதோறும் முதலெழுத்து ஒரே எழுத்தாய் வந்திருப்பதைக் கவனியுங்கள். இப்படி வருவது அடிமோனை எனப்படும். இங்கே அடிதோறும் வந் திருப்பது 'மா' என்ற நெடில் ஆகும். இதுபோன்று அடிதோறும் வந்த எழுத்தே மோனையாய் வர வைத்துப் பாடுவது இப்போது வழக்கில் இல்லை.

முதலாம் பக்கம் நாம் கண்ட பாடலில் வந்திருக்கும், மோனைகளை மீண்டும் கவனிப்போம். முதலாம் அடியிலே "கோல..'கூடி' என்றும் 'ஓல'...உண்மை என்றும் வருவனவற்றில் "கோ"..கூ, "ஓ" 'உ' என்பன மோனையாக வந்துள்ளன. இது பற்றிச் சற்று விரிவாகச் சிந்திப்போம்.

இ. வழிமோனை

கீழ்வரும் அடிகளைக் கவனியுங்கள்

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்"
"ஐயமும் பிச்சையும் அந்தணையும் கைகட்டி
"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளோர் கோமான்"
"ஔ' வையின்வாக்கு அமுதமொன்றின"
அ, ஆ மோனையா வந்துள்ளன.

ஐ, ஆ மோனையாக வந்துள்ளன.

ஔ, அ மோனையாய் வந்துள்ளன. இதிலிருந்து நாம் ஒரு பொது விதியை ஆக்கிக் கொள்ளலாம்.

ஓர் அடியில் வரும் சீர்களில் அ, ஆ, ஐ, ஔ என்ற உயிரெழுத்துக்களுள் ஒன்றுக்கு ஒன்று மோனையாய் வரலாம். (இவ்வுயிரெழுத்துக்கள் ஏறி நிற்கும் உயிர்மெய்களுக்கும் இவ்விதி பொருந்தும். (க, கா, கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. "இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ"
"இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்"
"எமக்கென்னென் (று) இட்டுண் (டு) இரும்"
"இருநாளைக் (கு) ஏலென்றால் ஏலாய்"

இ, ஈ, எ, ஏ ஓரடியில் வரும் சீர்களில் இவ்வுயிர் எழுத்துக்களுள் ஒன்றற்கொன்று மோனையாய் வரும் என்பதை விதியாகக் கொள்வோம். இவ்வுயிர்களுக்கு உயிர்மெய்யெழுத்தாகிய யகரமும் மோனையாய் வருதலும் உண்டு. பின்வரும் எடுத்துக் காட்டுக்களை கவனத்திற் வையுங்கள்.

"எண்ணி ஒருகருமம் யார்க்கும் செய் பொண்ணாது
"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
"இனிதாவ (து) எங்கும் காணோம்".

111. பின்வரும் அடிகளைக் கவனியுங்கள்,

"ஒட்டி உறுவார் உறவு"
"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்"
"உழுதுண்டு வாழ்வதற் (கு) ஒப்பில்லை கண்டீர்"
"ஒறுத்தாளை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றா"

இந்த எடுத்துக் காட்டுக்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் விதி இது தான்.

உ, ஊ, ஒ, ஓ — ஓரடியில் வரும் சீர்களில் இவ்வெழுத்துக்களுள் ஒன்றற்கொன்று மோனையாய் வரும்.

<u>மோனை — உயிர்மெய் எழுத்துக்கள்</u>

இதுவரை உயிர்எழுத்துக்கள் சார்ந்த மோனை களையே கண்டோம். இனி உயிர்மெய் எழுத்துக்கள் சார்ந்த மோனை பற்றிச் சிந்திப்போம்.

உயிர் எழுத்துக்கள் மோனையாய் வரல் பற்றிச் சிந்தித்த போது, அவ்வுயிர்கள் ஏறிவரும் உயிர்மெய்கள் பற்றியும் நீங்கள் சிந்தித்திருக்கலாம். ஆயினும் அதை இங்கும் தனியாகக் காண்போம்.

ஒன்றற்கொன்று மோனையாய் வரக்கூடிய உயிர்மெய் எழுத்துக்கள் இதன் கீழ்க் குறிப்பிடப்படுகின்றன. கவனியுங்கள்.

அ. க. கா, கை, கௌ
ஆ. கி, கீ, கெ. கே
இ. கு, கூ, கொ, கோ
ஈ. தி, தீ, தெ, தே

இவற்றை எடுத்துக் காட்டாகக் கொண்டு ஏனைய எழுத்துக்களுக்குமான மோனை பற்றி நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம். இன்னும் சில புறநடைகளை இனிக்காண்போம்.

ச, ஞ, ம ஆகிய எழுத்துக்களுக்கு அவ்வவ்வெழுத்துக்களேயன்றி வேறு எழுத்துக்களும் மோனையாக வரலாம்.

* 'ச' என்ற எழுத்துக்கு 'த' என்னும் எழுத்தும் வழிமோனையாய் வரலாம். அதாவது ச, சா, சை, சௌ என்னும் எழுத்துக்கள் ஏதாவதொன்று மோனையாக வருவதன்றி த, தா, தை, தௌ என்னும் எழுத்துக்களுள் ஏதாவதொன்றும் மோனையாக வரலாம்.

* தி, தீ, தெ, தே என்பவை ஒன்றற்கொன்று மோனையாக வரலாம் அல்லது சி, சீ, செ, சே என்பவற்றுள் ஒன்று மோனையாக வரலாம்.

இதன்படி சகரத்திற்கும் தகரத்திற்கும் எட்டு எட்டு எழுத்துக்கள் மோனையாக வரலாம் என்பது விதியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 'ஞ' கரத்திற்கு 'ந' மோனையாய் வரலாம். என்பதன் படி, ஞ, ஞா, ஞை, ஞெள, ந, நா, நை, நௌ என்பவற்றுள் ஒன்று மோனையான வரலாம். இதன் படி ஞகரத்திற்கும் நகரத்திற்கும் எட்டு எட்டு எழுத்துக்கள் மோனையாக வரலாம். என்பது விதியாகிறது.

* 'மகரத்திற்கு "வ' கரம் மோனையாய் வரலாம். இதன்படி ம, மா, மை, மௌ, வ, வா, வை, வௌ என்பன ஒன்றற்கொன்று மோனையாக வரலாம். இதன்படி மகரத்திற்கும் வகரத்திற்கும் எட்டெட்டு எழுத்துக்கள் மோனையாக வரலாம். என்பது பெறப்படுகிறது.

இனி உயிரெழுத்து உயிர் மெய்யெழுத்துச் சார்பாக மோனை பற்றிய விதிகளைச் சுருக்கமாகத் தொகுத்துப் பார்ப்போம்.

1. அ, ஆ, ஐ, ஔ — தம்முள் இனமாகும்
2. இ, ஈ, எ, ஏ, (ய) — "
3. உ, ஊ, ஒ, ஓ — "
4. ச, த, ... — "
5. ஞ, ந, , , , — "
6. ம, வ.... — "

மற்றைய எழுத்துக்களுக்கு அவ்வெழுத்துக்களே இனமாகும். மோனைபற்றிய நினைவுக்குக் கீழ்வரும் செய்யுள் உதவும்.

"அகரமோ(டு) ஆகாரம் ஐகாரம் ஔகான்
இகரமோ(டு) ஈகாரம் ஏ — உகாமோ(டு)
ஊகாரம் ஒ, ஓ, ஞநமவ தச்சகாம்
ஆகாத அல்ல அறு

இம்மோனைகளை ஏழு வகையாகக் குறிப்பிடலாம்.

அவை,

1. இணைமோனை

"அணிமலர் அசோகின் தளிநலம் கவற்றி"
நகற்சீரடிச் செய்யுளில் முதல் இரண்டு சீர்களிலும் மோனை வருவது இணை மோனையாகும். இணையாக வருதலால் இது இணைமோனை எனப்படும்(1-2)

2. பொழிப்பு மோனை

அரிக்குரற் கிண்கிணி அரற்றும் சீரடி
முதற் சீரிலும் முன்றாம் சீரிலும் மோனை
வருவது பொழிப்பு மோர்னையாகும் ( 1-3)

3. ஒரூஉமோனை

"அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி"

முதற் சீரிலும் இறுதிச்சீரிலும் மோனை வருவது ஒரூஉ மோனை எனப்படும். (ஒரூஉதல் — நீங்குதல்).

4. கூழைமோனை

"அகன்ற அறிஞன் அணிமலர் மார்பன்"
முதல் மூன்று சீர்களிலும் மோனை வருவது கூழை மோனை எனப்படும். (கூழை — (1, 2, 3)

1. இறுதி குறைந்து நிற்றல்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. <u>மேற்கதுவாய் மோனை</u>

"அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்"

இரண்டாம் சீரில் இல்லாமல் மற்றச் சீர்களில் மோனை வருவது மேற்கதுவாய் மோனையாகும். (மேற்கதுவாய் – கீழே இடை இட்டு மேலே தொடர்ந்து நிற்றல்). (1, 3, 4)

6. <u>கீழ்கதுவாய் மோனை</u>

"அவிர்மதி அனைய திருநுதல் அரிவை"

மூன்றாம் சீரலன்றி ஏனைய சீர்களில் மோனை வருதல். (மேற்கதுவாய்– கீழே உள்ளதாகி மேலே நிற்றல்) (1, 2, 3)

7. <u>முற்றுமோனை</u>

"காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட"

எல்லாச் சீர்களிலும் மோனை வருவது முற்று மோனையாகும்.

இங்கு கூறப்பட்டவை அளவடிக்கே (நாற்சீரடிக்கே) உரியன.

இதுவரை நாம் வகைப்படுத்திய மோனைகளைச் சுருக்கமாகத் தொகுப்போம்.

1. (சீர் 1, 2 இல் வரும் மோனை) இணைமோனை

2. (1, 3 இல் வரும் மோனை) பொழிப்பு மோனை

3. (1--4) வரும் மோனை) ஒரூஉமோனை

4. (1, 2, 4- வரும் மோனை) கூழைமோனை

5. (1-,3, 4 இல் வரும் மோனை) மேற்கதுவாய்மோனை

6. (1, 2? 4 இல் வரும் மோனை) கீழ்க்கதுவாய் மோனை

7. (1, 2, 3, 4 இல் வரும் மோனை) முற்றுமோனை

மேற்கூறிய மோனைகளைத் தெரிந்து கொள்வது கவிதையைப் பொருளுக் கேற்ப ஓசை நயத்தோடு இயற்றத் துணை செய்யும். நாற்சீரடியில் முதற்சீரும் மூன்றாம் சீரும் மோனை அமைதல் சிறப்பாகும். அறுசீர் விருத்தத்தில் முதற் சீரும் நான்காம் சீரும் மோனை வருதல் நல்லது. எண்சீர் விருத்தத்தில் முதற் சீரும் ஐந்தாம் சீரும் மோனை வருதல் அழகாகும். பன்னிரு சீர்விருத்ததில் முதற்சீர் , ஐந்தாம்சீர், ஏழாம்சீர், பதினோராம்சீர்களில்மோனை வரல் மரபு. இவ்விருத்த அடிகளை நான்கு வரிகளில் அமைத்தல் வேண்டும்.

அடுத்த பாடத்தில் எதுகைத் தொடையை பார்ப்போம்.

திமிலைத்துமிலன்,

17.04.98

இந்த/--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட/கலாசாரப் பேரவை.

மரபுக்கவிதைப் பயிற்சி நெறி.

தொடை (தொடர்) ......

எதுகைத் தொடை

எதுகைத்தொடை என்றால் என்ன என்பதை நாம் அறிவோம்,

சிறந்த சொற்களைச் சிறந்தமுறையில் அமைத்து இயற்றுவது செய்யுள். அச்செய்யுள் வெறும்செய்யுளாயில்லாமல் கவிதையாக இருக்க வேண்டுமானால், சொல்ல வேண்டியதை எப்படிச்சொல்லவேண்டுமோ அப்படிச் சொல்ல வேண்டும். 'எப்படிச் சொல்ல வேண்டுமோ, அப்படி' என்பனுள்ளே பொதிந்து கிடப்பவை உணர்ச்சியூட்டல், கவித்துவம்/கலைத்தன்மை என்பன. கவிதை மூலம் சரியான உணர்ச்சியை ஊட்ட வேண்டுமானால், சீர், அடி, தொடை என்பவற்றிற்கும் கட்டுப்பட்டு கவிதை நடக்க வேண்டும். தொடைகள் எதுகை, மோனை என இருவகை. மோனை பற்றி முந்திய பாடத்தில் கற்றோம். இன்று எதுகை பற்றி அறிவோம்.

கீழ்வரும் செய்யுளை நோக்குங்கள்,

'மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?
என்னினி உறுதி அப்பால்? இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்'

செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் உள்ள முதற்சீரை நோக்குங்கள். அவற்றின் முதலெழுத்துக்கள் எல்லாம் குறில்களாக உள்ளன. இரண்டாவது எழுத்துக்கள் ஒன்றாக இவருகின்றன. இதை வைத்துக் கொண்டு எதுகை என்றால் என்ன என்பதை நாம் துணியலாம். அதுவே எதுகை என்பதற்கான விதியாகவும் அமைந்துவிடும்.

'அடிதோறும் முதற்சீர் நெட்டெழுத்தாய் இருந்தால் நெட்டெழுத்தாய் இருக்க, குற்றெழுத்தாய் இருந்தால் குற்றெழுத்தாயிருக்க இரண்டாவது எழுத்து ஒன்றிவருவது எதுகை எனப்படும்.'

எதுகை என்ற சொல்லுக்குப் பொருத்தம் என்பது பொருளாகும்.

கீழ்வரும் செய்யுள்களைக் கவனியுங்கள் அவற்றில்எதுகை எவ்வாறு அமைந்துள்ளதென்பதைக் கண்டறியுங்கள்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

'கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்'

எதுகையில் பலவகைகள் உள்ளன. அவை பற்றி நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வல்லின எதுகை.

'தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்'

இக்குறட்பாவிலே 'தக்' என்பதற்கு எதுகையாக 'எச்' என்பது வந்துள்ளது. இவ்வாறு வருவது தவறல்ல. ஏனெனில் 'க், ச், ட், த், ப், ற்' என்பன வல்லின எழுத்துக்கள் ஆகும். இவ்வாறு வருபவை வல்லின எதுகைகள்எனப்படும்.

சீரின் இரண்டாம் எழுத்து அதே எழுத்தாக ஒன்றி வரவேண்டுமே என்பதற்காக இக்குறளை பின்வருமாறு அமைக்க முடியுமா?

'தக்கார் தகவிலர் என்ப தவரவர்
மக்களால் காணப்/படும்' அப்படியானால் வள்ளுவரிலேயே நாம் குற்றம் கண்டவராகிவிடுவோம். அவர் பொருளறிந்தே எச்சம் என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளார். 'மக்கள்' என்ற சொல்லை விட 'எச்சம்' என்ற சொல் விரிவான கருத்தைக் கொண்டது. எச்சம் என்பது மக்களை மாத்திரம் குறியாது, எச்சவைத்துப் போபவை எல்லாம் எச்சமே. 'எச்சம்' என்பது எதுகைக்கு இங்கு பொருந்துகிறது. இவ்வாறு வருவன வல்லின எதுகைகளாகும்.

2) மெல்லின எதுகை.

'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிவெண் குடைபோன்றிவ்
வங்கள் உலகளித்த லான்'

இந்தச் சிந்தியல் வெண்பாவிலே வந்துள்ள எதுகைகளைக் கவனியுங்கள். இவை மெல்லின எதுகைகள்.

'அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு' இக்குறள் வெண்பாவிலே 'ன்' என்பதற்கேற்ப 'ண்' வந்துள்ளது இது தவறல்ல. 'ங், ஞ், ண், ந், ம், ன்' என்பன மெல்லின மெய்கள். ஆதலால் இவ்வாறு வரும் எதுகைகளை மெல்லின எதுகைகள் என்போம்.

3) இடையின எதுகை.

'பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதழும் மணிமறுவல் அரும்பரவை
சீர்பரவை பாயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை யிடைப்பட்ட என்னாசை எழுபரவை'
இந்தக் கொச்சகக் கலிப்பாவிலே பேர், ஆர், சீர், ஏர் என இடையின எதுகைகள் வந்துள்ளன.

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு' இக்குறள் வெண்பாவில் 'ல' என்பதற்கு 'ய்' வந்துள்ளது. 'ய், ர், ல், வ், ழ், ள்' என்பன இடையின மெய்கள். இடையின மெய்க்கு இடையின மெய்யே வந்துள்ளது. இவ்வெதுகையை இடையின எதுகை என்போம்.

4) வருக்க எதுகை.

'அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானொ டூர்ந்தானிடை'

.....3/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறள் வெண்பாவிலே 'ற்' என்பதற்கு 'று' வந்துள்ளது.
ற, றா, றி, றீ, று, றூ, றெ, றே, றை, றொ, றோ என்பன ஒரே வருக்க எழுத்துக்கள். இவற்றுள் ஒன்றுக்கு ஒன்று எதுகையாக வருதலை வருக்க எதுகை என்பர். இதனை ஏனைய வருக்க எழுத்துக்களுக்கும் நாம் இயைபுபடுத்திக் கொள்ளலாம்.

'மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி'

இவ்வறுசீர் விருத்தத்தில் முதலாம் இரண்டாம் அடிகளில் 'வி' 'வ' என்பன எதுகைகளாக வந்துள்ளன. இதுவும் வருக்க எதுகையே.

## 5. மூன்றாம் எழுத்து ஒன்று எதுகை.

'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'

இக்குறட்பாவில் மூன்றாம் எழுத்து எதுகையாக வந்துள்ளது. இவ்வாறு வரும் எதுகைகளும் வழக்கில் உள்ளன.

## 6. ஆசிடையிட்ட எதுகை.

'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்' இக்குறளில் முதலாம் இரண்டாம் அடிகளில் வந்துள்ள முதற்சீர்களைக் கவனியுங்கள். 'வாய்மை' தீமை என்பன அவை இங்கே 'ய்' ஆசாக வந்துள்ளது.

'மாக்கொடி யானையும் மௌவற் பந்தரும்
காத்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகை' என்பதில் 'ர்' ஆசாய் வந்துள்ளது.

'ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்' என்பதில் 'ல்' ஆசாக வந்துள்ளது.

'வாழ்கின்றோம் என்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று' இங்கே 'ழ்' ஆசாக வந்துள்ளது.

ஆசு இடையிட்ட எதுகை என்பதற்கு பற்றுக்கோடான எழுத்து இடையில்வரும் எதுகை எதுகை என்பது பொருள். ஆசு பற்றுக்கோடு. ய், ர், ல், ழ் என்னும் எழுத்துக்களில் ஒன்று சீரின் முதல் எழுத்திற்கும் எதுகை எழுத்தாகிய இரண்டாம் எழுத்திற்கும் இடையே பற்றுக் கோடாக வருவது. இதுவே ஆசிடையிட்ட எதுகை எனப்படும். ய், ர், ல், ழ் என்னும் எழுத்துக்கள் அரை உயிர்போன்றவை இவை ஆசாக வருவது செய்யுள் வழக்கில் உள்ளது. இவை வருவதால் ஓசை இன்பம் கெடுவதில்லை.

மோனை எதுகைத் தொடைகளேயன்றி முரண்தொடை, இயைபுத்தொடை, அளபெடைத் தொடை என்பனவும் உண்டு. அவை பற்றிய தகவல்களை யாப்பருங்கலக் காரிகையில் காணலாம்.

– திமிலைத்துமிலன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/கலாசாரப் பேரவை

மரபுக் கவிதைப் பயிற்சி நெறி.

## 10. ஓசை(Musical Tone)

'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!' என்றார் பாரதியார்.
இந்த ஓசை என்பது யாது?

சீர்களின் சேர்க்கையால் உண்டாகி, தளைகளால் அமைந்த செய்யுள்களில் அச்செய்யுள்களின் தன்மைகளால் ஏற்படுவது ஓசையாகும். அதாவது சீர்களின் சேர்க்கையும் தளைகளின் இணைப்பும் பொருந்த உருவாகும் அடிகளால் செய்யுள்கள் ஆக்கப்படும் போது அந்தச் செய்யுள் வகைகளுக்கேற்ப பல்வேறு ஓசைகள் அமைகின்றன. அவற்றையே நாம் செய்யுளோசைகள் என்கிறோம்.

ஒவ்வொரு பாவுக்கும், ஒவ்வொரு பாவினத்துக்கும் ஒவ்வொரு ஓசை ஒழுங்கமைப்பு உள்ளது. அந்த ஓசை ஒழுங்கமைப்பே செய்யுள் ஓசைக்குக் காரணமாகிறது.

இந்த ஓசை நயத்தால் என்ன பயன்? பாட்டின் இனிய இசை இன்பம் நுகர இது காரணமாகிறது. இவ்வோசைலயம் பாவேறுபாட்டைக் காட்டுகிறது. அத்தோடு செய்யுளைக் கற்போர்க்கும் விருப்பையூட்டுகிறது. ஆதலால் இவ்வோசை பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

'இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று'
என்கிறது எல்வழி. இசை நலம் கருதியே பிறமொழிப் பாட்டுக்களையும் நாம் விரும்புகின்றோம்.

இங்கு நாம் குறிப்பிடும் ஓசை, பாட்டுக்குப் பண்/இராகம் அமைப்பதால் உண்டாவதல்ல. இவ்வோசை செவ்வையாக சீர், தளை அமைப்பினாலேயே உண்டாகிறது. இதுவே செய்யுளோசை. இந்தச் செய்யுளோசை பண்/இராகம் அமைக்கவும் உதவுகிறது.

இவ்வாறான செய்யுள் ஓசைகள் பற்றி இங்கும் நாம் சிந்திப்போம்.

1. செப்பல் ஓசை

(அ) ஏந்திசைச் செப்பலோசை.
மிரல்

'யாதானும் நாடா/ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு'

இந்தக்குறள் வெண்பாவின் சீர்களை நோக்குங்கள். வெண்பாவின் இறுதிச் சீர்தவிர, மற்றெல்லாச் சீர்களும் காயச் சீர்களாய் வந்துள்ளன.

யாதானும் ÷ தேமாங்காய்
நாடா மால் ÷ தேமாங்காய்
ஊராமால் ÷ தேமாங்காய்
என்னொரு வன் ÷ கூவிளங்காய்
சாந்துணையும் — கூவிளங்காய்
கல் லா த — தேமாங்கா
(இறுதிச்சீர்) வாறு — காசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச்சீர்தவிர, எல்லாச் சீர்களும் காய்ச்சீர்களாய் உள்ளதால் ஓசை உயர்ந்து நிற்கிறது. உயர்தல் -ஏந்துதல். ஆகவே இது ஏந்திசைச் செப்பல் ஓசையாகும். செப்பல் என்பது சொல்லுதல் என்ற கருத்துடையது.

" அகவிக் கூறாது (விரித்துக்கூறாது) ஒருவற்கு ஒருவன் இயல்புவகையானே (இயல்பாகவே) ஒரு பொருண்மை கட்டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை" என்றின்றார் பேராசிரியர்.

காய்ச்சீர்களை மூவசைச்சீர்கள் என்றும் வெண்சீர்கள் என்றும் நாம் அறிவோம். இந்தக் காய்ச்சீர் முன் நேர்வருவது வெண்டளை என்றும் அறிவோம். வெண்டளை வெண்பாவுக்குரிய தளையாகும். எனவே இந்த வெண்பா செப்பலோசை ஏந்திசைச் செப்பலோசை வெண்பாவாகும்.

(ஆ) தூங்கிசைச் செப்பலோசை.

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு" இந்தக் குறள் வெண்பாவின் சீர்களைக் கவனியுங்கள்

இருமை - புளிமா
வகைதெரிந் - கருவிளம்
தீண்டறம் - கூவிளம்
பூண்டார் - தேமா
பெருமை - புளிமா
பிறங்கிற - புளிமா
றுலகு - பிறப்பு

இங்கு வந்துள்ள சீர்கள் எல்லாம் ஈரசைச்சீர்கள் - இயற்சீர்கள் இதை அதவற்சீர் என்றும் கூறுவர். இயற்சீர் என்பது எல்லாப் பாக்களிலும் இயன்று- பொருந்தி நிற்கும் சீராகும். மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளையாகும். இந்தக் குறள் வெண்பா இயற்சீர் வெண்டளையால் முழுமையாக முடிந்துள்ளது. எனவே இக்குறள் வெண்பா தூங்கிசைச் செப்பலோசை கொண்டதாகும். இயற்சீர் வெண்டளையால் முற்றமுடியும் வெண்பா தூங்கிசைச் செப்பலோசையுடையது.

(இ) ஒழுகிசைச் செப்பலோசை.

" கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" இந்தக் குறள் வெண்பாவில் உள்ள சீர்களை அவதானியுங்கள்.

கொல்லான் - தேமா
புலாலை - புளிமா
மறுத்தானைக் - கருவிளம்
கைகூப்பி - தேமாங்காய்
எல்லா - தேமா
உயிரும் - புளிமா
தொழும் - மலர்

இதில் ஈரசைச்சீர்களும் மூவசைச்சீர்களும் கலந்து வந்துள்ளன. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர்வெண்டளையும் கலந்துவருமானால் அது ஒழுகிசைச் செப்பலோசையாகும்.

காய்ச்சீர் முன்நேர்வருவது வெண்டளை
மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

ஒழுகிசை என்பது உயர்வு தாழ்வு இன்றி ஒழுகிச் செல்லும் இசை. 'ஒழுகல்' என்பது ஒழுங்காக அல்லது சமமாக நடத்தல் என்ற பொருள்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரசைச்சீர்களும் மூவசைச்சீர்களும் கலந்து வருவது ஒழுகிசைச் செப்பலோசை.

செப்பலோசை என்பது வெண்பாவுக்குரியது. அது

(அ) ஏந்திசைச்செப்பலோசை
(ஆ) தூங்கிசைச் செப்பலோசை
(இ) ஒழுகிசைச் செப்பலோசை என மூவகைப்படும்.

(2) அகவல் ஓசை (Narrative Musical Tone)

(அ) ஏந்திசை அகவல் ஓசை

"போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானம் துன்று வாரே"

இந்த அகவலின் சீர்களை நோக்குங்கள். எல்லாச் சீர்களும் ஈரசைச்சீர்கள். மாமுன் நேர்வருவது நேரொன்றாசிரியத் தளையாகும். இந்த அகவல் நேரொன்றாசிரியத்தளையால் முற்ற முடிந்திருக்கிறது. எனவே இது ஏந்திசை அகவல் ஓசையாகும்.

(ஆ) தூங்கிசை அகவல் ஓசை

"அணிநிழல் அசோகமர்ந் தருள்நெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவம்நனி பரிசறுப் பவரே"

இந்த அகவலின் சீர்களையும் தளைகளையும் கவனியுங்கள் எல்லாச்சீர்களும் ஈர் அசைச் சீர்கள் எல்லாத் தளைகளும் நிரையொன்றாசிரியத்தளைகள். விளமுன் நிரை வருவது நிரையொன்றாசிரியத்தளை என்பதை அறிவோம். ஆகவே இது தூங்கிசை அகவல் ஓசையாகும்.

(இ) ஒழுகிசை அகவல் ஓசை.

"தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே"

இந்த அகவற்பாவின் சீர்களையும் தளைகளையும் நோக்குங்கள். மாமுன் நேர்வருவது விளமுன் நிரைவருவதுமாகிய, நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் இந்தச் செய்யுளில் கலந்துவந்துள்ளன. இவ்வாறு வருவது ஒழுகிசை அகவல் ஓசையாகும்.

'அகவல்' என்பது விளித்தல் என்ற பொருளுடையது. எனவே விளித்துக் கூறுமிடத்து தொடர்ந்து கிடக்குமோசை அகவல் ஓசையாகும்.

"அகவிக் கூறவான் அகவல் எனக் கூறப்பட்டது. அஃதாவது, கூற்றும் (ஒருவர் ஒன்று கூறுவது) மாற்றமும் (அதற்கு மறுமாற்றம்- பதில்- பின் ஒருவர் கூறுவது) ஒருவன் கேட்ப, அதற்கு ஒன்று செப்பிக் கூறாது தான் கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோர் ஆறும் உண்டு. அதனை வழக்கிலுள்ளார்; அழைத்தல் என்றும் சொல்லுப; அங்ஙனம் சொல்லுவார் சொல்லின் கண் எல்லாம் தொடர்ந்து கிடந்த ஓசை அகவல் எனப்படும்" என்று பேராசிரியர் விளக்கியுள்ளார்.

அகவல் ஓசை,

(அ) ஏந்திசை அகவல் ஓசை
(ஆ) தூங்கிசை அகவல் ஓசை
(இ) ஒழுகிசை அகவலோசை என மூன்றாகும்.

(3) துள்ளல் ஓசை (Jumping and Trotting Music)

(அ) ஏந்திசைத் துள்ளல் ஓசை.

"திருவளைய கருநெடுங்கண் சிலைநுதலார் மயல்வலையில்
இரு நிலக்கண் விழுந்துழலும் எளியவனை எடுத்தருள்பிற்
பொருவரிய நினதடியார் புடைசேரத் திருமகக்கண்
பரவவருள் புரிந்திடுவாய் பசுபதியெம் பெருமானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...4/

இந்தக் கொச்சகக் கலிப்பாவைப் பாருங்கள். முழுக்க இது கலித்தளையால் முடிந்துள்ளது. காய்முன் நிரைவருவது கலித்தளை என்பதை அறிவோம். முழுதும் காய்முன் நிரையே வருமானால் அது ஏந்திசைத் துள்ளல் ஓசையெனப்படும்.

(ஆ) பிரிந்திசைத் துள்ளல் ஓசை

"சொரிந்திட்ட மலர்ப்பொழிலுள் சூழ்ந்திட்ட வாவியெல்லாம்
நெரிந்திட்ட மணம் கமழும் நிலையொற்றி யூர்நாட்டில்
விரிந்திட்ட பெருங்கடலே, மேய்வளையே, கம்புள்ளே
பிரிந்திட்ட என்தலைவன் பெயர்ந்ததிசை பேசுவீரே"

இக்கொச்சகக் கலிப்பாவில் கலித்தளையும் வெண் சீர்வெண்டளையும் வந்துள்ளதைப் பாருங்கள். காய்முன் நேர்வருவது வெண்சீர் வெண்டளை என்பதை அறிவோம் கா... காய்முன் நிரைவருவது கலித்தளை என்பதும் நமக்குத் தெரியும். இந்த இருவகைத் தளைகளும் இக்கலிப் பாவின் கலந்து வந்துள்ளன. இவ்வாறு வருவது தான் பிரிந்திசைத் துள்ளல் ஓசை.

(இ) அகவல் துள்ளல் ஓசை.

"நேரலார் போரேறே, நிடதத்தார் கோமானே;
ஆர வரைமார்பா, அடியேன் உயிர்க்குயிரே;
காரிருளில் யான்புலம்பக் கானகத்தில் விட்டகன்று
சாரலையால் இன்னும், இதுவோநின் தண்ணளியே!"

இக்கவிப்பா அகவல் துள்ளல் ஓசை கொண்டு அமைந்துள்ளது. இதன் சீர்களைக் கவனிப் போமானால், கலித்தளையும், வெண்சீர் வெண்டளையும், பிறதளைகளும் கலந்துவந்து ள்ளதைக் காண்போம். காய்முன் நிரைவருவது கலித்தளை, காய்முன் நேர்வருவது வெண்சீர் வெண்டளை இவை தவிர நேர்முன் நேர்வரும். நேரொன்றாசிரியத்தளையும் இதில் வந்துள்ளது. அத்தோடு நிரைமுன்நேர்வரும் இயற்சீர்வெண்டளையும் இதில் உள்ளது. இவ்வாறு கலித்தளையும் வெண்சீர்வெண்டளையும் பிறதளைகளும் கலந்துவரும் கலிப்பாவில் அகவல் துள்ளல் ஓசையைக் காணலாம்.

துள்ளல் ஓசை என்பது 'முரற்கைப்படுமாற்றால் (துள்ளிஒலித்தலால்) துள்ளிச் செல்லும் ஓசையாகும்' எனப் பேராசிரியர் கூறுவார். துள்ளல் ஒழுகிச்செல்லாது இசையிடையே உயர்ந்து செல்வதாகும். இத்துள்ளல் ஓசை,

அ) ஏந்திசைத் துள்ளல் ஓசை
ஆ) பிரிந்திசைத் துள்ளல் ஓசை
இ) அகவல் துள்ளல் ஓசை என மூவகைப்படும்.

(4) தூங்கல் ஓசை (Limping Melody)

சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன இல்லெல்லாம்
மீன்திரிவன கிடங்கெல்லாம்
தேன்தாழ்வன பொழிலெல்லாம்

இவ் வஞ்சிப்பா இரு சீர்கொண்ட அடியால் அமைந்துள்ளது. வஞ்சிப்பாவின் கனிச்சீர்கள் வருமென்பதை நாம் அறிவோம். சீர்களைக் கவனித்தால் கனிமுன் நிரையும் கனிமுன் நேரும் வந்துள்ளதைக் காண்போம். இவ்வாறு வருவன ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றாத வஞ்சித்தளையுமாகும். இவ்வஞ்சிப்பா அடிகளில் தூங்கல் ஓசை வந்துள்ளது. வஞ்சிப்பா இருசீர்கொண்ட அடிகளாலும் வரலாம். முச்சீர்கொண்ட அடிகளாலும் வரலாம். தூங்கல் ஓசையிலும் மூவகைப் பிரிவுகள் உள்ளன. அவை அவசியமல்ல. தூங்கல் ஓசையென்பது தொங்கிச் செல்லும் ஓசையாகும். வஞ்சித்தளைகொண்டமைவது வஞ்சிப்பா. வஞ்சிப்பாவில் தூங்கல் ஓசையைக் காணலாம்.

இதுவரை நாம் கண்டவற்றால், செய்யுளில் ஓசை பெறும் இடத்தை உணர்ந்தோம். செய்யுளில் ஓசைநயம் இன்றியமையாதது. அவ்வோசை நான்குவகைப்படும். அவையாவன,

1. செப்பலோசை - (வெண்பாவுக்குரியது) 2. அகவலோசை - (அகவற்பாவுக்குரியது)
3. துள்ளலோசை - (கலிப்பாவுக்குரியது) 4. தூங்கலோசை - (வஞ்சிப்பாவுக்குரியது)

என்பதை அறிந்தோம்.

-திமிலைத்துமிலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு கலாசாரப் பேரவை
மரபுக் கவிதைப் பயிற்சி நெறி

பாவும் பாவினமும்

## அறிமுகம்

மரபுவழிச் செய்யுள்களை நாம் பாக்களும் பாவினங்களும் என இருபெரும் பிரிவுகளில் அடக்கலாம். செய்யுள் என்பது எது என்பதை பவணந்தி முனிவர்,

"பலவகைத் தாதுவின் உயிர்க்குமேல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என்னும் நூற்பாவால் காட்டியுள்ளார். இத்தகைய செய்யுள்களையே நாம் இருபெரும் பிரிவுகளில் அடக்குகிறோம்.

பா நான்கு வகையாகும். அவை,

1. வெண்பா
2. ஆசிரியப்பா
3. கலிப்பா
4. வஞ்சிப்பா என்பன. இந்த நான்கினையும் தவிர "மருட்பா" எனும் ஒரு வகைப்பாவும் உள்ளது.

எடுத்துக் காட்டாக இந்தப் பாக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றைக் கீழே காண்போம். அவை ஒவ்வொன்றினதும் உருவத்தையும் நீங்கள் அவதானித்து இனம்காண வல்லவராக "பாவை பிரித்தறிகைத்" திறன்பெறல் வேண்டும். பின்னர் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் விபரமாக ஆராயலாம்.

1. வெண்பா என்ற பாவில் பல வகையான வெண்பாக்கள் உள்ளன. அவை

1. குறள்வெண்பா

வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு

2. <u>சிந்திய பல வெண்பா</u>

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றம் குமைக்க வருமுன் நமரங்காள்
ஏற்றுகந்தான் பெற்றா ளிணை"

3. <u>நேரிசை வெண்பா</u>

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடின் ஏதம்தான் என்னும் -உறந்தையர்கோன்
தண்ணார் மார்பின் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

4, <u>இன்னிசை வெண்பா</u>

"கல்லா ஒருவர்க்குத் தம்வாயின் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்குவார்க் கறம்கூற்றம் கூற்றமே
இல்லத்துத் தீங்கொழுகு வாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பஃறொடை வெண்பா

"மதிமன்றும் மாயவன் வாண்முகம் ஒக்கும்
கதிசேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும், பூவைப்
பொதுமலர் ஒக்கும் நிறம்.

6. கலிவெண்பா

"அடாத் தொடீஇ கோளாய் தெருவில்யாம் ஆகு
மணற்சீற்றில் காலிற் சிதைய அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோததக்க செய்யும் சிறுபட்டி மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, இல்லீரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிகரத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள், எனயானும்.
தன்னை அறியாது சென்றேன் மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னாய இவனொருவன் செய்தது காண என்றேனா
அன்னை அலறிப் படர்த் தன்னை யான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் சொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்"

11. ஆசிரியப்பா/அகவற்பா

நேரிசை ஆசிரியப்பா

செய்யு வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வர்தவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொற்றிவாழ் பூவே.

2. இணைக்குறளாசிரியப்பா

நீரின் தன்மையும் தீயின்/வெம்மையும்
சாரச் சார்ந்து தீர்த் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே

3. நிலைமண்டில ஆசிரியப்பா

வேரல் வேலி வேர்க்கட் பலவின்
சார னாட செவ்வினய யாமேதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

தீர்க்கம் என்பது சிவகங் கையே
ஏக்க ருந்தலம் எழிற்புலி யூரே
மூர்க்தி அம்பலக் கூத்தன் உருவே

111. கலிப்பா

1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

(தரவு)

வாணெடுங்கண் பனிகூர வணைம்வே றாய்த்திரிந்து
கோணொடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணடங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ"

(தாழிசை)

சூருடைய கடுங்கானம் செலற்கரிய என்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே
சேறுடைய கடுந்தடங்கள் செலற்கரிய என்பவால்
நாறுடைய நலந்தொலைய நடப்பாரோ" நலமிலரே
சிலம்படைந்த வெங்கானம் சீரிலவே என்பவால்
புலப்படைத்த நலந்தொலைய போவாரோ பொருளிலரே

(தனிச்சொல்)

எனவாங்கு

(சுரிதகம்)

அருளெனு மிலராய்ப் பொருள்வயின் பிரிவோர்
பன்னெடுங் காலம் வாழியா
பொன்னொடுந் தேரொடு தானையிற் பொலிந்தே

2. கொச்சகக் கலிப்பா

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்.

3. சட்டளைக் கலிப்பா

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பிள்ளை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சன்மமோ
மூட னாயடி யேனும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சன்மமோ
என்செய் வேன்கச்சி ஏகம்ப் நாதனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வெண்கலிப்பா

வானார்ந்த மழைக்கடங்கன் வனமுலைமேற் வம்பலுங்கக்
கோளார்ந்த புணாகம் குழைபுரள்க் கோட்டெருக்கின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்த
சோலைதாழ் பிண்டிக்கீழ்க் குழ்ந்தவர்தம் சொன்முறையான்
மனையறமும் துறவறமும் மன்னவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைக்க
தொன்மைசால் மரமுணர்த்துக் துறவரசைத் தொழுதேத்தல்
நன்மைசால் வீசெய்து மாறு

வஞ்சிப்பா

1. குறளடி வஞ்சிப்பா

நந்தாய்தமர் நங்காதலர்
நஞ்சேய்பிறர் நந்தாவுறை
நந்தேயமேல் வந்தோனி
தொந்தாள்துயர் தந்தேயிவண்
நிந்தாநெறி நின்றாரிவர்
தந்தாவளி சிந்தாவிழ
அடிப்போமடல் கெடுப்போமுகத்
திடிப்போங்குடல் அடுப்போமிடும்
பொடிப்போம் வசை தடைப்போடிஉயிர்
குடிப்போம்வழி கடுப்போம்பழி
முடிப்போம் இனி நடப்போம் பழி
என வாங்கு
பெருமுர சதிரப் பெயருமின்
கருமுகில் ஈர்க்கெழும் உருமென ஆர்த்தே.

2. சிந்தடி வஞ்சிப்பா

கொடிவாலான குருநிறத்தன் குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பனையெருத்தின இணையரிமான் அணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயில்நடுவன் இனிதிருந்து எல்லார்க்கும்
பயிலப்படுவினை பக்தியலாற் செப்பியோன்
புனையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி எளிதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநிலை வாழ்த்து மருட்பா.

அரசியல் கோடா தானடியார்ப் போலும்
முரசியல் தானைவேல் மன்னர் பரசோன்
கழலினை பொதுவில் காப்பாக
வழிவழி சிறந்து வாழியா பெரிதே.

2. வியனிலைக் கைக்கிளை மருட்பா

பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவர்க்கே அன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்கும் - திருந்த
வலமயர் சிறப்பின் மன்ற மானக்
குலமுனி புதல்வனுக் கீந்த
அலைகட லாகுமில் வாயிழை நோக்கே.

3. செவியறிவுறூஉ மருட்பா

வாழ்த்துமின் தில்லை நினைமின் மனமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவர்க்கு - வீழ்த்த
புறநெறி யாற்றா தறநெறி பேற்றி
நெறிநின் றெழுகுமிர் மன்ற
துறையறி மாந்தர்க்கு சூழ்கடன் இதுவே.

4. நூற்பா

" சிலவகை எழுத்திற் பலவகைப் பொருளைச்
செல்வன் அடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்ப சிறந்தன சூத்திரம் "

பாவினம்

வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவற்றின் இனமாக அமைவனவே பாவினங்களாகும். ஒவ்வொரு பாவிற்கும்,

1. தாழிசை
2. துறை
3. விருத்தம் என மும்மூன்று இனங்கள் உள்ளன.

இவ்வாறாக அமையும் பாவினங்கள் 12 ஆகும். அவை;

வெண்பாவுக்கு;

1. வெண்டாழிசை
2. வெண்டுறை
3. வெளிவிருத்தம்

ஆசிரியப்பாவுக்கு,

4. ஆசிரியத் தாழிசை
5. ஆசிரியத்துறை
6. ஆசிரிய விருத்தம்

கலிப்பாவுக்கு

7. கலித்தாழிசை
8. கலித்துறை
9. கலிவிருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சிப்பாவுக்கு;

10. வஞ்சித் தாழிசை

11. வஞ்சித்துறை

12. வஞ்சிவிருத்தம் என அமையும். எடுத்துக் காட்டுக்கள்.

1. <u>வெண்டாழிசை</u>

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.

2. <u>வெண்டுறை</u>

படர்ந்தருவெம் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
பவத்தொடர்பாற் படராநிற்கும்
விடலருவெம் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
கழிவுண்டோ வினையேற் கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென் செய்கே னென்சி செய்கே
னடலரவ மரைக்கசைத்த வடிகளோ வடிகளோ

3. <u>வெளிவிருத்தம்</u>

அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு நீரேபோலும்
திங்கட் சடையிருந் தில்லைவனத் துள்ளீரே நீரேபோலும்

4. <u>ஆசிரியர் தாழிசை</u>

சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னைந்தன் கண்களே
யுத்தம் னைந்தெழுத் துருவங் காண்பன

5. <u>ஆசிரியத்துறை</u>

"கரைபொரு கானியாற்றங் கல்லதரெம் முள்ளி வருவிராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சியகன்று போக
நரையுரு மேறுங் கைவே லஞ்சு நும்மை
விரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ"

6. <u>ஆசிரிய விருத்தம் (அறசீர்)</u>

விடஞ்சூ ழரவி னிடைநுடங்க மின்வாள் வீசி விரையாள் வேய்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண்ணீல மலர்தாந்தாம்
கடந்தோ னிரண்டும் வேய்தாந்தா மென்றந் தன்னகத் தன்னுமையே

7. <u>கலித்தாழிசை</u>

இருகூற் றுருவத் திருந்தன் பொழிற்றில்லை
யொரு கூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
ஒருகூற்றின் கூத்தை யுணரா யெனின் மற்றப்
பொருகூற்றத் தோற்றப் புலம் பேல்வாழி மடநெஞ்சே

8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கலித்துறை

யானுந் தோழியு மாயமு மாருந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையு மெல்லாங் கரியன்றே.

9. கலிவிருத்தம்

வெய்தலை நீறுய வெள்ளி விலங்கலி
னாய்தலி னெல்சுட ராழியி னான்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
வீதலை சென்றுரை நீள்கண்ட காப்போம்.

10. வஞ்சித்தாழிசை

பிணியென்று பெயராமே
துணிநின்று தவஞ்செய்வீர்
அணிமன்றல் உமைபாகன்
மணிமன்று பணிவீரே

என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்றல் உமைபாகன்
பொன்மன்று பணிவீரே

அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீர்
உருமன்றல் உமைபாகன்
திருமன்று பணிவீரே

11. வஞ்சித்துறை

முல்லைவாய் முறுவலித்தன
கொல்லைவாய்க் குருந்தீன்றன
மல்லல்வான் மழைமுழங்கின
செல்வர்தேர் வரவுகாண்குமே

12. வஞ்சிவிருத்தம்

சோலை ஆர்ந்த சுரத்திடைக்
காலை பார்கழல் ஆர்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல உண்கணிவள் வாழுமே.

கிரிலை ஸ்ரீமிலன்
09.05.98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/கலாசார பேரவை நடாத்தும் மரபுக் கவிதைப்
பயிற்சி நெறி

12. பாக்கள்

பா நான்கு வகைப்படும். அவை; வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன.

பாவினம் என்பது தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்றும் நான்கு பாக்களுக்கும் இனமாவது,

வெண்பாவிற்கு இனம்;
வெண்டாழிசை
வெண்டுறை
வெளிவிருத்தம் என்னும் மூன்றுமாம்.

ஆசிரியப்பாவிற்கு இனம்;
ஆசிரியத்தாழிசை
ஆசிரியத்துறை
ஆசிரிய விருத்தம் என்னும் மூன்றுமாம்.

கலிப்பாவிற்கு இனம்;

கலித்தாழிசை
கலித்துறை
கலிவிருத்தம் என்னும் மூன்றுமாம்.

வஞ்சிப்பாவிற்கு இனம்;
வஞ்சித்தாழிசை
வஞ்சித்துறை
வஞ்சிவிருத்தம் என்னும் மூன்றுமாம்.

எனவே, பாவினம் பன்னிரண்டாகும். இவற்றை நாம் முந்திய பாடத்தில் அறிந்தோம்.

இன்று பாவில் ஒன்றான வெண்பா பற்றி அறிவோம்

வெண்பா

வெண்பா,
குறள் வெண்பா
சிந்தியல் வெண்பா
நேரிசை வெண்பா
இன்னிசை வெண்பா
பஃறொடை வெண்பா
கலிவெண்பா எனப்பலவகை என அறிவோம்.

எல்லா வகையான வெண்பாக்களுக்கும் பொது இலக்கணம்;

1. அடி : இரண்டடிகளுக்குக் குறையாமலிருத்தல்
2. தொடை: எதுகை, மோனை பெற்றிருத்தல்
3. தளை: வெண்டளை தவறாதிருத்தல். வெண்டளை என்பது,

அ. தேமா ) நிரையசைவரல்
புளிமா )

ஆ. கூவிளம் ) நேரசைவரல்
கருவிளம் )

இ. தேமாங்காய் )
புளிமாங்காய் ) நேரசை வரல்
கூவிளங்காய் )
கருவிளங்காய் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈற்றுச்சீர்;
நாள் )
மலர் )
காசு ) இவற்றில் ஒன்று கொண்டு முடிதல்
பிறப்பு )

5. ஓசை – செப்பலோசை குறையாதிருத்தல்.

இனி ஒவ்வொரு வகையான வெண்பா பற்றியும் கவனிப்போம்.

1. குறள் வெண்பா

இது பாக்கள் எல்லாவற்றிலும் குறுமையுடையமையால் குறள்வெண்பாவெனப் பட்டது. குறள்வெண்பா;

* இரண்டே அடி கொண்டது
* முதலடியில் நான்கு சீர்கள் இருக்கும்
* இரண்டாவது அடியில் மூன்றே சீர்கள் இருக்கும்
* இரண்டாவது அடியின் ஈற்றுச்சீர் நாள் மலர் காசு, பிறப்பு என்பவற்றுள் ஒன்றைக் கொண்டு முடியும்.
* முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை இருத்தல் நல்லது.

* எதுகை, மோனை இருக்கும்
* வெண்டளை பிறழாதிருக்கும்
* செப்பலோசை குறையாதிருக்கும்.

பொருள் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்"
இந்தக் குறள் வெண்பாவில் மேற்கூறப்பட்ட எல்லா விதிகளும் அமைந்திருக்கின்றவை என்பதை நீங்களே அவதானித்துக் கொள்ளலாம்.

வெண்டளை பறழாதிருக்கிறதா என்பதை நோக்குவோம்.

நிரை நேர் நிரை நேர்
பொரு / ளல் /லவ /ரைப் – மாமுன் நிரை வெண்டளை
புளி மா புளி மா

நிரை நேர் நிரை நேர் நேர் ) மாமுன் நிரை
லவ ரைப் பொரு ளா கச் ) வெண்டளை
புளி மா புளி மாங் காய்

நிரை நேர் நேர் நேர் நேர்
பொரு ளா கச் செய் யும் ) காய்முன் நேர் வெண்டளை
புளி மாங் காய் தே மா

நேர் நேர் நிரை ) மா முன் நிரை வெண்டளை
தில் லை பொருள்
தே மா மலர்

எல்லாத் தளைகளும் வெண்டளை இறுதிச்சீர் மலர் என்ற வாய்ப்பாட்டால் முடிந்தது

இரண்டாம் அடியின் இறுதிச் சீர் பற்றி கவனத்திற் கொள்ள வேண்டியது.

இறுதிச்சீர் நிரையசையானால், வாய்ப்பாடு 'மலர்
" நேரசையானால், வாய்ப்பாடு "நாள்"
" நேர் நேர் ஆனால், வாய்ப்பாடு (காசு"
" நிரை நேர் ஆனால் வாய்ப்பாடு "பிறப்பு"

காசு, பிறப்பு என்ற வாய்ப்பாட்டில் முடிவன பெரும்பாலும் குற்றியலுகரமாகவே இருக்கும். முற்றியலுகரம் மிக அருகியே அமையும். (காவு, கசவு)

கீழ்வரும் குறள் வெண்பாக்களின் இறுதிச்சீர்கள் எவ்வெவ் வாய்ப்பாட்டால் முடிந்தன என்பதை இனங்காண முயலுங்கள்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"

எதுகை மோனை இல்லாமலும் குறள் வெண்பா இயற்றலாமா? இயற்றலாம்.
எடுத்துக் காட்டுங்கள்; இவை,

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை "விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"

"நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை"

ஓர் அடியில் வழியெதுகை வந்து விட்டால் அடியெதுகை இல்லாமலே குறளை இயற்றலாம் என்பதை இந்த உதாரணங்களால் நாம் உணர்ந்து கொள்ளலாம். குறள்களில் வழியெதுகைகள் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

2. சிந்தியல் வெண்பா

குறள் வெண்பாவைப் பார்க்கிலும் ஓரடிமிகுந்து அமைவது சிந்தியல் வெண்பா. சிந்தியல் வெண்பா மூன்றடிகள் கொண்டது. குறள் வெண்பாவை விடச் சிறிது நெடிதாய் இது அமைவதால் சிந்தியல் வெண்பா எனப்படுகிறது.

சிந்தியல் வெண்பா

* மூன்றடிகள் கொண்டது
* முதலிரு அடிகளிலும் நான்கு சீர்கள் இருக்கும்
* மூன்றாம் அடியில் மூன்று சீர் இருக்கும்.
* மூன்றாம் அடியின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றுள் ஒன்று கொண்டு முடியும்.
* மோனை எதுகை கொண்டது.
* மோனை முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் அமைவது நல்லது.
* வெண்டளை பிறழா தமையும்
* செப்பலோசை காணப்படும்.

சிந்தியல் வெண்பா

1. இன்னிசைச் சிந்தியல் வெண்பா
2. நேரிசை சிந்தியல் வெண்பா என இருவகைப்படும்.

இன்னிசைச் சிந்தியல் வெண்பாவுக்கும் நேரிசைச் சிந்தியல் வெண்பாவுக்கும் வேறுபாடு என்ன?

இன்னிசை சிந்தியல் வெண்பா, தனிச்சொல் பெற்று வராது. நேரிசைச் சிந்தியல் வெண்பா தனிச்சொல் பெற்று வரும்.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

"வழிமருத்தார் மாறன் மாறிவரைமேல் மாதர்
விழியெழுதி வாலுமினை வெற்பெழுதி னாலும்
மொழியெழுத லாமோ மொழி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வின்னிசைச் சிந்தியல் வெண்பாவில், வெண்பாவுக்கான பொது விதிகள் அமைந்துள்ளன. வெண்டளை தவறாது வந்துள்ளது. வெண்பாவின் ஈற்றுச்சீர், நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றுள் ஒன்று கொண்டு முடிந்துள்ளது. செப்பலோசை குன்றாது வந்துள்ளது. வெண்டளை தவறாது வந்துள்ளதா என்பதை அசை, சீர், தளைகளை ஆராய்ந்து நீங்கள் கண்டு கொள்ளலாம். இவ்வின்னிசைச் சிந்தியல் வெண்பாவில் தனிச்சொல் அமையவில்லை. மூன்றடிகளும் ஒரேவகையான எதுகை கொண்டுள்ளன. அவ்வாறன்றி வெவ்வேறு எதுகைகளும் அமைந்து வரலாம்.

2. நேரிசைச் சிந்தியல் வெண்பா

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே - எங்கோமான்
பங்குபற்றுக் கீராப் பசப்பு"

இங்கு வெண்பாவுக்குரிய பொது இலக்கணம் எல்லாம் அமைந்துள்ளதோடு இரண்டாம் அடி இறுதியில் தனிச்சொல் அமைந்திருப்பதையும் காணலாம். இவ்வாறு அமைவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும். இச்சிந்தியல் வெண்பாவில் தளைகள் பிறழாது அமைந்துள்ளனவா என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வருமாறு சிந்தியல் வெண்பாக்கள் இயற்றப்படுவதுண்டு. அப்போது ஒரே வகை எதுகைகள் பெற்று வருவதும் வெவ்வேறு வகை எதுகைகள் பெற்று வருவதுமுண்டு. இவ்வாறான சிந்தியல் வெண்பாக்களை, சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் காணலாம். இவை இசையுடன் பாட இனிமை பயப்பனவாக அமையும். சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் இடம் பெறும் சிந்தியல் வெண்பாக்கள் இவை;

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்/சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ
டோங்கிப் பரந்தொழுக லான்"

மூன்று சிந்தியல் வெண்பாக்கள் ஒரு பொருள் குறித்து அடுக்கி வருவது வெள்ளொத்தாழிசை" என்று யாப்பிலக்கணகாரர் பெயர் வழங்கியுள்ளனர்.

3.. இன்னிசை, நேரிசை வெண்பாக்கள்

சாதாரணமாக வெண்பா என்றதும் நாம் இன்னிசை, நேரிசை வெண்பாக்களையே அறிகிறோம். இனிய ஓசையும், இனிய சொற்களும் பெற்று வருதலால் இன்னிசை வெண்பா எனப்படுகிறது. இந்த இன்னிசை வெண்பா தனிச்சீர் பெற்று வருவதில்லை. நேரிசை வெண்பா செறிவும் வன்மையும் உடையதாய், தனிச் சீர் பெற்று வரும். இவ்விரு வெண்பாக்களுக்குமுள்ள வேற்றுமை இதுவேயாகும்.

(அ) இன்னிசை வெண்பா

* நான்கடிகள் பெற்று வரும்
* முதல் மூன்று அடிகளிலும் நான்கு நான்கு சீர்கள் வரும்
* ஈற்றடியில் மூன்று சீர்கள் வரும்
* ஒரேவகை எதுகை பெற்று வருதல் சிறப்பு
* அடிதோறும் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை பெற்று வருதல் நல்லது.
* வெண்டளை பெற்று வரல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஈற்றுச்சீர், நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றுள் ஏதாவது ஒருவாய்ப் பாட்டைப் பெற்று முடிய வேண்டும்.

* செப்பலோசை வரல் வேண்டும்.

" வாராய்நன் நெஞ்சமே வைகலும் நம் பாலினமை
தீராஅப் பெய்தும் திறமின் றுணர்ந்தனமால்
நாரா யனன்புகழே நாடியினி நாம் சனனம்
சாராத வாராய்தல் சால்பு"

இவ்வின்னிசை வெண்பாக்கள் ரே எதுகையை பெற்று வந்துள்ளது. அத்தோடு பொழிப்பு மோனையையும் பெற்று வந்துள்ளது. பொழிப்பு மோனை என்பது முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை பெறல் ஆகும். தனிச்சொல் பெறாது இன்னோசையுடன் வந்துள்ளதால் இன்னிசை வெண்பாவெனப்படுகிறது. இன்னிசை வெண்பா பொழிப்பு மோனை குறைந்தும் வரலாம். இவ்வித இன்னிசை வெண்பாக்கள், கருத்து ஆற்றொழுக்காய் அமைவதற்குப் பயன்படும். இன்னிசை வெண்பாக்கள் பலவிகற்ப எதுகைகள் கொண்டும் பாடப்படலாம்.

இந்த இன்னிசை வெண்பாவில் தளைகள் பிறழாது அமைந்துள்ளனவா என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

(ஆ) நேரிசை வெண்பா

"நேர் இசை" என்பது தகுதியான ஓசையுடைமையைக் குறிக்கும். வெண்பாக்களுக்குள்ளே தக்க ஓசையும் தக்க சொற்களும் பொருந்தி வருதலால் இது நேரிசை வெண்பாவெனப்படுகிறது.

நேரிசை வெண்பா

* நான்கடிகள் பெற்று வரும்.
* முதல் மூன்று அடிகளும் நான்கு நான்கு சீர்கள் பெறும்
* இரண்டாவது அடியில் நான்காவது சீர் தனிச் சீராய் வரும். இத்தனிச் சீர் முதல் இரண்டு அடிக்கும் வரும். எதுகையில் அமையும்.

* முதல் இரண்டடிகளுக்கு ஒருவகை எதுகையும் மற்ற இரண்டடிகளுக்கு வேறொரு வகை எதுகையும் வரும். நான்கு அடிகளுக்கும் ஒரே வகையான எதுகையும் வரலாம்.

* ஈற்றடி மூன்று சீர் கொண்ட சிந்தடியாக இருக்கும். இதன் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றில் ஒன்றாக அமையும்.

* வெண்டளை பிறழாது அமையும்
* செப்பலோசை குன்றாது அமையும்.

இவற்றைச் சுருங்கச் சொன்னால் நான்கடிகள் கொண்டு இரண்டாம் அடி இறுதியில் தனிச்சீர் பெற்று எதுகை இருவிகற்பமாயினும் ஒரு விகற்பமாயினும் அமைந்து வெட்டளை சிதையாது செப்பலோசையுடன் வருவது நேரிசை வெண்பாவாகும்.

ஒரு விகற்பம் என்பது அடிகள் யாவிலும் ஒரே வித எதுகை வருவதாகும். இருவிகற்பம் என்பது முன் இரண்டடி ஒரு வகை எதுகையும் பின்னிரண்டடி வேறொரு வகை எதுகையும் பெறுதலாகும்.

"கன்னின்றான் எந்தை; கணவன் களப்பட்டான்,
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர் — பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தான் என் ஏறு"

——— (முத்தொள்ளாயிரம்)

" "மான்தேர்த் தொழிற்கும் மடைத்தொழிற்கும் மிக்கோனென்
றூன்தேய்க்கும் வேலான் உயர்நறவத்— தேன்தேக்கும்
கார்வேந்தற் கென்வரவு கூறுமரையில் என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனைச் சென்று"

(நள வெண்பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) பஃறொடை வெண்பா

வெண்பாவுக்குரிய இலக்கணம் அனைத்தும் பஃறொடை வெண்பாவுக்கும் உண்டு. செப்பலோசையோடு இன்னிசை வெண்பா போன்றோ நேரிசை வெண்பா போன்றோ பல அடிகளால் வருவது பஃறொடை வெண்பா.

பஃறொடை வெண்பா

* 5 அடிச்சிற்றெல்லை 12அடி பேரெல்லை கொண்டது.
* ஒவ்வோர் அடியும் நான்கு நான்கு சீர் கொண்டது.
* ஈற்றடி சிந்தடியாயமையும்
* அடிகள் முழுக்க ஒரே வகை எதுகை கொள்ளல் சிறப்பு
* ஈற்றடி ஈற்றுச்சீர் ஏனைய வெண்பாக்கள் போல் முடியும்.
* முதற்சீரும் மூன்றாம் சீரிலும் மோனை வரல் சிறப்பு
* வெண்டளை பிறழாது அமையும்
* செப்பல் ஓசை குன்றாது

"மதி மன்னும் மாயவன் வான்முகம் ஒக்கும்
கதி சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணெக்கும்; பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம்

(நான்மாணிக்கடிகை)

## (ஈ) கலிவெண்பா

கலி வெண்பா இரு வகை;
1. இன்னிசைக் கலிவெண்பா
2. நேரிசைக் கலிவெண்பா

இன்னிசைக் கலிவெண்பா, வெண்பாவுக்குரிய இலக்கணம் பெற்று இரண்டாம் அடியீற்றில் தனிச்சீர் பெறாமல் வருவதாகும். இரண்டு இரண்டு அடிகளுக்கு எதுகை பெற்றும் இரண்டாம் அடி ஈறுதோறும் தனிச்சீர் பெற்றும் வருவது நேரிசைக் கலிவெண்பா. இவ்விரண்டுக்கும் மேலெல்லை இல்லை. விறலிவிடுதூது 2190 அடி கொண்டது.

கலிவெண்பா;

* பல அடிகள் கொண்டதாகவும் வரும்
* இரண்டு இரண்டு அடிகளுக்கு எதுகை வரலாம்
* ஈற்றடி சிந்தடி கொள்ளும்
* ஈற்றடி ஈற்றுச்சீர் மற்ற வெண்பாக்கள் போன்றதே
* முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை வருதல் சிறப்பு
* வெண்டளை பிறழாது வரும்
* செப்பலோசையுடையது
* நேரிசைக் கலிவெண்பாவானால் எதுகை வரத் தக்கதாகத் தனிச் சீர் வரும்.
* இன்னிசைக் கலிவெண்பாவுக்குத் தனிச்சீர் வராது
* கலிவெண்பா தூது, உலா, மடல், ஆகிய சிற்றிலக்கியவர்கள் இயற்ற உகந்தது.

இன்னிசைக் கலிவெண்பா;

குயில்கூவிக் கொண்டிருக்கும் கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும் வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும் கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு கனிமரங்கள் மிக்கவுண்டு

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அன்பு மிகுந்தே அழகிருக்கும் நாயகரே
இன்பமும் நாமும் இனி"

( [illegible] சாரல்' பாரதிதாசன் )

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

<u>நேரிசைக் கலிவெண்பா;</u>

(1) "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேரரிய
தாமேவு தெய்வப் பழமறையும்--தேமேவு

. . . . . . . . . . . . . . . . . . . .

(12) இம்மைப் பிறப்பில் இருவர் தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்--தம்மை விடுத்
தாயும் பழைய அடியா ருடன் கூடித்
தோயும் பரலோகம் துயப்பித்துச்--சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்
டடியேற்கு முன்நின் றருள்"

(கந்தர் கலிவெண்பா)

நேரிசை கலிவெண்பாவில் இரண்டிரண்டு அடிகளுக்கு ஓர் எதுகை வரக் கவனித்திருப்பீர்கள். இரண்டாம் அடிதோறும் ஈற்றில் தனிச்சீர் இருக்கிறது. அடிதோறும் முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை வரக் கண்டீர்கள். நேரிசை கலிவெண்பா பாடும் போது இவை கவனத்தில் இருத்தல் அவசியம்.

<u>செயற்பாடு</u>

(1) "ஈழத் தமிழினமே....." எனத் தொடங்கி ஒரு குறள் வெண்பா இயற்றுக.

(2) "பெண்ணிடம்போய் நெஞ்சைப் பிழி" என்ற ஈற்றடியோடு ஒரு சிந்தியல் வெண்பா எழுதுக.

(3) "எங்களுக்கே வெற்றி இனி" என்ற ஈற்றடி கொண்ட ஒரு நேரிசை வெண்பாப் பாடுக.

(4) "மாடத்துப் பால்நிலவு மங்களமாய்ப் பூத்திருக்க" என்ற தொடக்கத்தோடு ஒரு இன்னிசைக் கலிவெண்பா படைத்திடுக.

------ திமிலைத்துமிலன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோளை யார்வடக் கொழுங்குவ டொடிதர நிவந்த
ஆவி வேட்டன வரிசிலை யனங்கமேற் கொண்ட
பூவை வாய்ச்சியர் முலைகிளர் புயத்தொடும் பூட்டத்
தேவ தாரத்தர் சந்திரம் பூட்டின சிலமா.

(கோளை —ஆகாயத்தை, வரிசையாக—வட—வடதிசை , ஆலமரம்—
குவடு—மேருமலை, கிளைகள், ஒடிந்த —பின்னிட, ஓடியும் படி, ஆவி—உயிர், நடாகம்
வேட்டன—விரும்பின. வரிசிலை—கட்டமைந்தவில், அனங்கன்—மன்மதன், மேல்
கொண்ட—தொழிலில் ஏறிய, முதலில் கொண்ட , பூவை—வாய்ச்சியர்— பூவைபோல்
இனிய பேச்சினர், சிலமா—சிலயானைகள், தேவதாரம்—தேவதாரமரம்—சந்து—
சந்தனமாப் பட்டின—கட்டப்பட்டன, மாதர்முலைக்கும் யானைக்கும்
சிலேடை இப்பாடல்

செயற்பாடு

1. உவமைகள் அமையக் கூடிய ஒரு வெண்பாவை விரும்பிய பொருளில் வரைக.

2. உருவகங்கள் அமையும் ஒரு விருத்தப்பாவை விரும்பிய பொருளில் எழுதுக.

3. சிலேடைப் பாடல்கள் இன்றைக்கும் பொருந்துமா என்பதை ஆராய்க.

—நிமிலைத்தமிழன்———

16.06.93

இந்த/—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org